Registered asa Newspaper பக்கங்கள் 8

விலை ரூபா 6.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

## வெள்ளி மஞ்சரி

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | புரட்டாதி 14 | 30-9-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 224

## "இன்னும் ஒருநாடு" முழுநீளப்படம் நாளை மாலை வெளியீட்டு விழா

முல்லை மாவட்டக் கலை, பண்பாட்டுக் கழகமும், நிதர்சனமும் இணைந்து உருவாக்கிய ''இன்னும் ஒரு நாடு'' முழுநீளப்பட வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு யாழ்- கைலாசபதி கலையரங்கில் நடைபெற உள்ளது. முல்லை மாவட்ட கலை, பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. சங்கர் தலைமையில்நடைபெறும் இவ் வெளியீட்டு வைபவத்தில் மாவீரர் மேஜர் கிண்ணியின் தாயார் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# ராணுவ நடவடிக்கைகளுக்கு அரசு தடை விதிக்கவில்லை

## தாக்குதலைத் தொடரலாம் எனவும் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கப் படையினர் தமது நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு எதுவித தடையுமில்லை. அவர்கள் தாம் திட்டமிட்டவாறு இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து நடத்தலாம் என பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

நேற்று மாலை நடைபெற்ற விசேட பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் கூறுகையில் இரு தரப்பினர் மத்தியிலும் யுத்த நிறுத்தம் தொடர்பான ஒப்பந்தமோ அல்லது பேச்சுவார்த்தைகளோ மேற்கொள்ளப்படவில்லை எனவே விடுதலைப் புலிகள் நடத்தும் தாக்குதல்களுக்கு எதிர்த்தாக்குதல்களை மேற்கொள்வதற்கு அரச படைகளுக்குத் தடை எதுவும் விதிக்கப்படவில்லை.

மேலும் அரச படையினரும் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பல தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். எனவேஇருதரப்பினரும்யுத்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு அதிரடித்தாக்குதலில் நவீன ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் புலிகள் நடாத்திய அதிரடித்தாக்குதலின் போதுநவீனரகஆயுதங்கள் பல விடுதலைப்பு விக... தாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்திருந்தமை தெரிந்ததே.

★ ஏ. கே, எல். எம் ஜி - 02

...கிகள் - 07

★ ரி-56-1 ரக துப்பாக்கி - 01

★ ரி-56- புதியரகதுப்பாக்கி - 01

## ஜனவரி முதல் ஆசிரியருக்கு புதிய சம்பளத் திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஆசிரியர்களுக்கு புதிய சம்பளத் திட்டம் அமுலாக இருப்பதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்துள்ளார்-

உக்தேச ஆசிரியர் சேவை சர்வதேச ஆசிரியர் தினமான அடுத்த மாதம் 6-ம் திகதி அறிமுகப்படுத்தப் படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்-

## அதிக புள்ளி பெற்றுள்ள மாணவர்கள் தெரிவு

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்ற மாணவர்களை கல்வி உயர்கல்வி அமைச்சு தெரிவு செய்துள்ளது

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து 18 பேரும், திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களிலிருந்து தலா 6 மாணவர்களும் உச்ச புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

## ஆண்டு இறுதிக்குள் புதிய கல்வி கொள்கை

(கொழும்பு)

இவ்வாண்டு பூர்த்தியடைவதற்கு முன் புதிய கல்விக் கொள்கை, மக்கள் முன் வைக்கப்படுமென கல்வி, உயர்கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்காக தேசிய கல்விச் சேவை ஆணைக்குழு, உட்பட பல உயர் கல்வியுடன் தொடர்புடைய நிறுவனங்களுடனும் மற்றும் கல்விமான்களுடனும் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும் அறிய வருகின்றது.

## புனர்வாழ்வு அதிகாரி அகதிகளால் தடுத்துவைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் நாட்டிலிருந்து திரும்பிவந்த அகதி மக்கள் திருகோணமலை அலெக்ஸ் முகாமில் வைத்து அகதிகள் புனர்வாழ்வு அதிகாரியை தடுத்து வைத்தனர்.

கடந்த வாரம் தமிழ் நாட்டிலிருந்து கப்பலில் வந்து சேர்ந்த அகதி மக்கள் ... தில் உள்ள அகதி முகாமிற்கு ஏற்றிச் செல்லப்பட்டனர்.

அகதி மக்கள் முகாமைச் சென்றடைந்த பின்னர் சில குடும்பங்களின் பொருட்கள் அடங்கிய பொதிகள் திருடப்பட்டிருந்தன, இதை அடுத்து ஆத்திரம் கொண்ட அகதிகள் ...

அரசியலமைப்பு மாற்றம் குறித்து

## கட்சிகளின் கருத்துக்கள் நவ. 27 வரை பெறப்படும்

(கொழும்பு)

அரசியல் அமைப்பை மாற்றுவது தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழு நேற்று முன்தினம் மாலை பாராளுமன்ற கட்டடத்தில் கூட்டப்பட்டது.

இக்கூட்டத்தில் கார்த்திகை மாதம் 27-ம் திகதிக்கு முன்னதாக இது தொடர்பான கருத்துக்களை அரசியல் கட்சிகளிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும் எனவும் ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தில் சொக்சி, லக்ஸ்மன் கதிர்காமர், எதிர்க் கட்சித்தலைவர் காமினி திசா

(8ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளை அனுப்புவதை நிறுத்த அரசு கோரிக்கை

### கொள்ளை நோய் குறித்து அச்சம்

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் செயற்பாட்டை உடன் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு சுகாதார சமூக சேவைகள் அமைச்சர் ஏ எச். எம். பௌசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தியாவில் வேகமாக பரவி வரும் கொள்ளை நோய் இலங்கைக்குவரும் என்ற பீதியினால் இந் நடவடிக்கையை தாம் மேற்கொண்டதாகவும் இந் நோய் குறித்து தாம் பூரண அவதானமாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையில் இந்த நோய் குறித்து தேவை

(8ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கியதில்

டிலிருந்து கப்பலில் வந்து சேர்ந்த அகதி மக்கள் லொறிகளில் அலெக்ஸ் தோட்டத்

ஆத்திரம் கொண்ட அகதிகள் குறிப்பிட்ட முகாமில் வைத்து (8ஆம் பக்கம் பார்க்க)

குதலின் போது நவீனரக ஆயுதங்கள் பல விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன. இத்தாக்குதலின் போது 14 ராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் ஏனையோர் காயங்களுடன் திரும்பிவிட்ட

- ★ ஏ. கே, எல். எம். ஜி - 02
- ★ அதற்குரிய ரம் மகசீன் - 03
- ★ ஏ.கே எல். எம். ஜி. லிங் - 400
- ★ ரி- 56 - 2 ரக துப்பாக்
- ★ ரி-56- புதியரகதுப்பாக்கி - 01
- ★ ரி-81 ரக துப்பாக்கிகள் - 02
- ★ ஏ. கே. கோல்சர் - 10
- ★ ஏ. கே. மகசின் - 40

(8ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கியதில் 3 மீனவர்கள் பலி

நேற்று அதிகாலை மின்னல் தாக்கி கடற்தொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மீனவர் மூவர் உடல் கருகி பலியானார்கள்.

பொன்ராசா ஜெயரூபன் (வயது24) மணியந்தோட்டம், 3ஆம் குறுக்குத்தெரு, ஞானப்பிரகாசம் எட்மன் கில்லறி (வயது 37) மணியந்தோட்டம், 3ஆம் குறுக்குத் தெரு, நாகபாதம் றஞ்சித் மணிப்புரி, 4 ஆம் குறுக்குத் தெரு ஆகியோரே பலியானவர்களாவர்.

இவர்கள் நேற்றுஅதிகாலை மணியந்தோட்டம் கடற்பகுதியில் இறால் இழுப்பு வலை இழுத்துக்கொண்டு இருந்த வேளை இடியுடன் கூடிய மழை பெய்தது மழையையும் பொருட்படுத்தாமல் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவேளை அவர்கள் தொழில் செய்து கொண்டிருந்த கடற்பகுதியில் மின்னல் தாக்கியதால் இவர்கள் உடல் கருகி பலியாக நேர்ந்ததாக தெரிய வருகிறது.

அப் பகுதியில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டிருந்த ஏனைய தொழிலாளர் இவர்களை உடன் வைத்திய சாலைக்கு எடுத்து வந்த போதும் அவர்கள் மரணமானார்கள். (88,24,21)

## புளொட் தேசத்துரோகி புலிகளால் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு ஆயித்தியமலை இராணுவ முகாமிலிருந்து காட்டிக்கொடுப்பு வேலையில் ஈடுபட்டு வந்த 'புளொட்' தேசத்துரோகி ஒருவர் விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த 27-ம் திகதி இரவு 9 30 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்பிராசா பொன்னம்பலம் (கெழுத்திமடு ஆயித்தியமலை) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

## நாம் விடிவு பெற கடற்பகுதியில் எமது ஆதிக்கம் வலுப்பெற வேண்டும்

### கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை

(வடமராட்சி)

கடற்பகுதியில் எமது ஆதிக்கம் முழுமையடையும் போது தான் நாம் விடிவு பெறமுடியும். சாகரவர்த்தனாவை தகர்த்து கடற் கரும்புலிகள் இதற்கு வலுச் சேர்த்திருக்கிறார்கள்- இவ்வாறு கடற் புலிகளின் சிறப்புத் தளபதி சூசை தெரிவித்துள்ளார்-

கற்பிட்டிக் கடலில் யுத்தக் கப்பலை தகர்த்து வீரகாவியம் படைத்த வெற்றி நாள் நிகழ்வில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்-

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், எங்கள் மக்களில் பலரைப் படுகொலை செய்ய உதவிய சாகரவர்த்தனா இன்று மூழ்கடிக்கப்பட்டு விட்டது-சாகரவர்த்தனா தக (8ஆம் பக்கம் பார்க்க)

## பிளேக் நோயை தடுக்க ஏயர்லங்கா சேவை ரத்து

(கொழும்பு)

''பிளேக்'' நோய் இலங்கையில் பரவுவதை தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பம்பாய். டில்லி நகரங்களுக்கான ஏயர் லங்கா விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் பணிப்புக்கிணங்க இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக (8ஆம் பக்கம் பார்க்க)

## சொத்தி உபாலியின் சகா சுட்டுக்கொலை

(கொழும்பு)

பாதாள உலக கிரிமினலான சொத்தி உபாலியின் நெருங்கிய சகா தம்பகுத என்பவர் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்துள்ளார்.

இவர் களனிப் பகுதியில் தலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கைகள் கட்டப்பட்ட நிலையில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த நிலையில் அங்கு வந்த பொலிசார் அவரை உடன் வைத்தியசாலைக்குகொண்டு சென்றனர். எனினும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை,

## புலிகளுடன் பேசுவதை உலகவங்கி வரவேற்கிறது

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப்பிரச்சினைக்குதீர்வொன்றைக் கொண்டுவருமுகமாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதை உலகவங்கி வரவேற்கும் என உலகவங்கியின் தென்கிழக்காசிய உபதலைவர் தெரிவித்துள்ளார்.

தென்னாசியாவில் பொருளாதார சீர் திருத்தங்களை செய்வதற்கு இலங்கை பொருத்தமான நாடெனினும் சமாதானம் ஏற்படாதவிடத்து இது சாத்தியமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கற்பிட்டி கடலில் வீரகாவியம் படைத்த கடற்கரும்புலிகளுக்கு நேற்று அஞ்சலி

(வடமராட்சி)

கற்பிட்டிக் கடலில் கடந்த 19 ஆம் திகதி சிறிலங்கா அரசின் சொந்தமான கடலரசன் யுத்தக்கப்பலை தகர்த்து வீரகாவியம் படைத்த கடற்கரும்புலிகளின் நினைவாக மாபெரும் அஞ்சலிக்கூட்டம் நேற்று மாலை 5-30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாவீரர் கலை அரங்கில் நடைபெற்றது.

முன்னதாக நெல்லியடிச் சந்தியில் இருந்து பெருந்திரளான மக்கள் அணிதிரண்டனர். வலிகாமம், தீவகம், வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் இருந்து வந்த மக்கள் நேற்றைய கூட்டத்தில் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

வடமராட்சியில் இருந்து வந்த மக்கள் பருத்தித்துறை வீதியில் இருந்தும், தென்மராட்சி மக்கள் கொடிகாமம் வீதியில் இருந்தும் வலிகாமம் தீவக மக்கள் நெல்லியடி (8ஆம் பக்கம் பார்க்க)

## உலகவங்கி அதிகாரிகள் குழு விரைவில் யாழ். வரும்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் குழு ஒன்று யாழ் மாவட்டத்திற்கு வருகை தந்து முக்கியம் வாய்ந்த தேவைகளை ஆராய்ந்து வேலைத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு முடிவு செய்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

மிக விரைவில்: யாழ்ப்பாணம் வரவிருக்கும் இக்குழுவில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் அடங்குவர்.

இக்குழுவினர் யாழ். மாவட்டம் முழுவதும் சுற்றிப் பார்த்து உடனடி புனர்வாழ்வு நடவடிக்கை செய்ய வேண்டியவை பற்றி தரவுகள் பெறுவார்கள்.

இங்கு பார்வையிட்டுமூன்று வகையான வேலைகளைச் (8ஆம் பக்கம் பார்க்க)

### சிறப்பு ஒளிநாடாக்கள்

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ பரிமாணங்களை எடுத்துக் காட்டும் ''இதயபூமி'', பலாலியிலே காவியம் படைத்த கரும்புலிகள் நினைவாக ''உயி (7ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான ஒப்பந்தம் குறித்து அரச அதிகாரிகள்குழு பேசாது

### அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஆரம்பகட்ட பேச்சுகளை நடத்த யாழ்ப்பாணம் செல்ல இருக்கும் அரசாங்க அதிகாரிகள் தூதுக்குழு சமாதான ஒப்பந்தம் குறித்து முடிவு செய்யவோ அல்லது இது குறித்த பேச்சுகளை நடத்தவோ மாட்டாது என தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

இத்தூதுக்குழு குறித்து பத்திரிகையாளர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்;

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின பிறிமா புறோயிலர்கோழிக்குஞ்சுகள் (10 நாட்கள் முடிந்தவை) உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: மேஜர் பிரதாப் செட்டி பண்ணை இராசவீதி கோப்பாய் (சி-10421)

### ஆனந்தம் சீயாக்காய்

சிரசின் தனித்துவத்தைப் பேணுவதற்குவேண்டிய மூலிகைகளுடன் சீயாக்காய் சேர்த்து சித்த மருத்துவ நிபுணர் ஆலோசனைப்படி தயாரிக்கப் பெற்றது ஆனந்தம் சீயாக்காய் பவுடர். பேன் சொடுகு அழுக்கு முற்றாக அகற்றி சுகவாழ்வு தருகிறது கேட்டு வாங்குங்கள் ஆனந்தம் சீயாக்காய்ப்பவுடர் (சி-10288)

### அப்பியாசக் கொப்பி

பாடசாலைச் சீருடைகள் அலுவலக உடைகள் பளிச்சிடும் வெண்மையுடன் ஒளிர சலவை நேரத்தைச் சேமிக்க மில்க்வைற் சலவைத்தூள் உதவுகிறது. மில்க்வைற் சலவைத்தூள் வெற்றுப்பைக்கற்றுகள் 25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக் கொப்பியை பெற்றுக் கொள்ளுங்கள். (சி-10426)

### விற்பனைக்குண்டு

திருநெல்வேலியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி திருமதி லிங்கா துரைராஜா சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும், 19 பண்டாரக்குளம் ஒழுங்கை நல்லூர். (9519)

### தவறிவிட்டது

கிறேஸ் சோபிதமணி நவநேசராசா ஆகிய எனது அடையாள அட்டை 426343166v 27-09-94 அன்று யாழ்ப்பாணம் தேசியசேமிப்பு வங்கியில் தவறிவிட்டது கண்டெடுத்தவர் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (9555)

### சேவல் விற்பனைக்குண்டு

இரண்டு மாதம் வளர்ச்சி



## G. A. Q. - 96

(பேராதனைப் பல்கலைக்கழகம்)

★ மேற்கூறப்பட்ட பட்டப்படிப்பு நெறிக்கான விண்ணப்பங்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன-

★ G. C. E. A/L பரீட்சையில் 03 பாடங்களில் சித்தியுடன் 180 புள்ளிகளைப் பெற்றவர்களும்

★ பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

இப்பாடநெறிக்கான விரிவுரைகள்

**ஆரம்பம்: 15. 10 1994**

(சனி காலை 9 மணி)

இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் எம்மால் செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களை நேரில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்

## G. A. Q - 94 (டிசம்பர்)

(பேராதனைப் பல்கலைக்கழகம்)

மேற்படி பாடநெறிக்கான மீட்டல் விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

## B. A. - 95

(பேராதனைப் பல்கலைக்கழகம்)

மேற்படி பாடநெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி விட்டன.

மேலதிக விபரங்களுக்கு:

எஸ். அருள்நங்கை

## புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

(சி/10429)



Personal

**NEW SCIENCE CENTRE**

எழிலகம் முன்

-யாழ்ப்பாணம்.

**94 A/L**

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள்


### பவன அமுக்கம்

நாட்டின் தென் கிழக்குப் பகுதியில் வளிமண்டலத்தில் பவன அமுக்கம் ஏற்பட்டிருப்பதாகவும் இதனால் வானம் மப்பும், மந்தாரமுமாக இருக்கும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.


## மோட்டார் லொறிகள் (திறந்த வாகனம்)

### வாடகைக்குத் தேவை

இலங்கை மின்சார சபையின் யாழ்ப்பாணப் பிரதேச அலுவலக மின் உற்பத்தி இயந்திரங்களை (Generator) இடத்திற்கு இடம் கொண்டு செல்வதற்கு நல்ல நிலையிலுள்ள 5 தொன் நிறையுடைய திறந்த லொறிகள் 03ம் 10 தொன் நிறையுடைய திறந்த லொறிகள் 2ம் தேவைப்படுகின்றன இந்த லொறிகள் பருத்தித்துறை துறைமுகத்திலிருந்து மின் உற்பத்தி இயந்திரங்களை ஏற்றிக் கொண்டு, ஒரு லொறி வடமராட்சிப் பகுதிக்கும், ஒரு லொறி தென்மராட்சிப் பகுதிக்கும், ஒரு லொறி வலிகாமம் பகுதிக்கும், இரு லொறிகள் யாழ்ப்பாணம் பிரிவுகளுக்கும் செல்ல வேண்டும். பின்னர் அந்தந்தப் பகுதிகளில் சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படுவதற்காக இடத்திற்கு இடம் மின் உற்பத்தி இயந்திரத்துடன் செல்லுதல் வேண்டும்,

இந்த வகையில் இந்த லொறிகள் அவ்வப் பகுதிகளில் சுமார் 03 மாதம் வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படும். 03 மாதம் முடிந்த பின்னர் தேவை ஏற்படின் இந்த ஒப்பந்தம் அந்த நேரத்தில் உள்ள நிலைமைகளின் படி புதுப்பிக்கப்படலாம். இதற்கு விருப்பமுடைய லொறி உரிமையாளர்களிடமிருந்து காப்பு முத்திரையிடப்பட்ட கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் 1994-10-10ஆம் திகதி காலை 10-00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ''மின் பொறியியலாளர், யாழ் பிரதேச அலுவலம், இலங்கை மின்சார சபை, சுன்னாகம்'' என்ற முகவரிக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் யாவும் பின்வரும் விபரங்களை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

1) நிலையான சேவைக்குரிய மாதாந்த கட்டணம்.
2) அக்காலப்பகுதியில் சேவையில் ஈடுபடுத்தப்படும் ஒரு கிலோமீற்றருக்குரிய கட்டணம்,

இந்த வாகனங்கள் எம்மிடம் சேவை புரியும் காலப் பகுதியில் ஏற்படும் எந்தவித செலவுகளையோ அல்லது சாரதிக்குரிய சம்பளத்தையோ வாகன உரிமையாளரே செலுத்துதல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு மின் பொறியியலாளர், இலங்கை மின்சார சபை, சுன்னாகம் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**மின்பொறியியலாளர்,**
யாழ் பிரதேச அலுவலகம்,
இலங்கை மின்சார சபை,
சுன்னாகம்.

(சி-10430)



## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் வர்த்தக நிறுவனம் ஒன்றிற்கு களஞ்சியப் பொறுப்பாளர் தேவை.

6 வருடத்திற்குக்குறையாத முன் அனுபவம் உள்ளவராக இருத்தல் வேண்டும்

முடிவுத் திகதி :- 05 - 10 - 94

விண்ணப்பங்களை விள இல 351 பே/பா
ஈழநாதம் 31, மகேந்திரா வீதி
யாழ்ப்பாணம்

என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

[9554]


## கப்பல் மூலம் சீமெந்து எடுத்துவர முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்களுக்கு கொழும்பில் இருந்து சீமெந்து தருவித்து நியாயமான விலையில் விநியோகிக்கப்படவுள்ளது. பொதுமக்களின் தேவையை ஓரளவேனும் பூர்த்தி செய்யும் முகமாக கொழும்பில் இருந்து மண்ணெய் ஏற்றிவரும் கப்பலில் ஒவ்வொரு மாதமும் 300 மெற்றிக் தொன் சீமெந்தை கொள்வனவு செய்து யாழ்ப்பாணம்கொண்டுவந்து நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் இதனை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ளதாகவும், இத்திட்டத்தில் ஆர்வமுடைய சங்கங்கள் இதற்கான முற்பணத்தை செலுத்தும் பட்சத்தில் ஒக்ரோபர் மாதத்திலேயே இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தலாம் என்றும், சங்கங்கள் தமது உத்தேச கொள்வனவுத் தொகை பற்றிய விபரத்தை உடன் தமக்கு அறியத் தருமாறும் புனர்வாழ்வுப் பகுதி திட்டப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். [22]

## நினைவு கூருகின்றோம்...

### 30. 09. 1994

1988ம் ஆண்டு இதேதினத்தில் விசுவமடு-கல்மடுப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சுதா** (சுப்பிரமணியம் திருச்செல்வம் - குமரபுரம்-கிளிநொச்சி)

1990ம் ஆண்டு யாழ்-தீவகம், ஊர்காவற்றுறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**சரத்பாபு** (சுந்தரலிங்கம் சந்திரகுமார் - துன்னாலை வடக்கு - பருத்தித்துறை)

1992ம் ஆண்டு பதவியா- பராக்கிரமபுரம் பகுதியில் அமைந்துள்ள கோங்வேவ இராணுவ மினி முகாமை தாக்கியழித்த போது வீரச்சாவெய்திய,

**லெப். விகடன்** (சாமிநாதன் இலங்கநாதன் - கள்ளப்பாடு -முல்லைத்தீவு)

**சேரமான்** (சிவராசா சிவரூபன் - 4ம் கண்டம், கற்சிலைமடு-ஒட்டிசுட்டான்)

**கப்டன் அத்தி** (கணபதிப்பிள்ளை விஜயசேனன் - ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி)

**கப்டன் வேங்கைமாறன் ஞானசேகர்** (சீமான் சூசை லிபேரருஸ் எற்றிசிங் - மன்னார்

**லெப். அரவிந்தன்** (தங்கவேல் ரவி - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

இதேதினத்தில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசங்களிலும், கடற்பரப்பிலும் சிறிலங்கா படையினரால் கொல்லப்பட்ட தமிழ் பொதுமக்கள்;

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

[சி-10423]

## இன்றைய அறிமுகம்!

## நடிகர் தங்கவேலு மரணம்

(சென்னை)

### சேவல் விற்பனைக்குண்டு

இரண்டு மாதம் வளர்ச்சியடைந்த சேவல்கள் உடன் விற்பனைக்குண்டு. ''மல்லிகா பதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய், (9561)

### ஆண்டு 4, 5

ஆண்டு 4 ற்கு புலமைப் பரிசில் (1995) மாதிரி வினாத்தாள் (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 02-10-94 ஞாயிறு வெளியிடப்படும் ஆண்டு 5 மாணவர்களுக்கு ஆண்டு 6 பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி வினாத்தாள் 01-10-94 சனி வெளியிடப்படும் தேவையானோர் தொடர்பு கொள்ளவும் மாதிரி வகுப்புகளும் நடைபெறுகின்றன.

(9558)

### SPECIAL ENGLISH

★ பல்கலைக்கழகம் தொழிற் கல்லூரி; உயர் கல்வி கற்க விரும்பும் மாணவற்குரியது

★ TOEFL; N. C. E.

ஆங்கில ஆசிரிய தெரிவு ஆகிய பரீட்சைகளுக்குரிய கற்கை நெறி

ஆசிரியர்:

த. ந. பஞ்சாட்சரம்

வகுப்புக்கள் ஆரம்பமாகி நடக்கின்றன

செவ்வாய் காலை 9 மணி

வியாழன் காலை 9 மணி

*SCIENCE CENTRE KARAVEDDI*

(9557)

---

மாணவர்களுககான துரித மீட்டல் வகுப்புக்கள்

**ஆரம்பம்:**

**1-10-94 சனி 8 A M**

(பிரிவு-I)

இரசாயனவியல்-8 A M
திரு. செல்வா
B.Sc (Hons)

பௌதிகவியல்-9 A.M
திரு.ரவீந்திரநாதன்
B Sc (Cey) Dip. in Ed

விலங்கியல் -11 A M
திரு. ஈஸ்வரதாசன்
B.Sc (Cey), Dip. in Ed

தாவரவியல் -10 A M
திரு. பாலா

தூய்-பிரயோககணிதம் -12 30 P.M
திரு. குணசிங்கம்
B.Sc (Hons)

(பிரிவு -II)

இரசாயனவியல்
திரு. மகேஸ்வரன்
B Sc (Hons)

பௌதிகவியல்
திரு. ஜெயசீலன்
B.Sc (Hons)

தூயபிரயோககணிதம்
திரு. குணசிங்கம்
B.Sc (Hons)

விலங்கியல்
திரு. ஈஸ்வரதாசன்
B.Sc (Cey),Dip in Ed

தாவரவியல்
திரு. சிறிகரன்
B.Sc. (Cey),Dip in Ed

SPOKEN ENGLISH WITH GRAMMAR
Mr. HARI

(சி-10425)

---

## இன்றைய அறிமுகம்!

## நாளைய ஆரம்பம்!!

# நிமலன் புகைப்பட நிலையம்

சகல அளவுகளில் கறுப்பு, வெள்ளை புகைப்படங்களை பிடித்துக்கொள்ளவும் சகல அளவுகளில் பெரிதாக்கவும் (ENLARGEMENTS)

!

நாடுங்கள்

## நிமலன் புகைப்பட நிலையம்

மற்றும்

★ புகைப்படச் சுருள்கள் [FILM ROLLS]

★ புகைப்பட பிரதிபண்ணும் தாள்வகைகள்

★ பற்றறிகள்

★ அல்பம் மற்றும் பல ..... பெற்றுக்கொள்ள

## நிமலன்

155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

155. MANIPAY ROAD, JAFFNA.

(9562)


---

### தங்கவேலு மரணம்

(சென்னை)

பிரபல தமிழ் திரைப்பட நகைச்சுவை நடிகர் தங்கவேலு (77) நேற்று முன்தினம் மாரடைப்பால் உறக்கத்திலேயே காலமானார்.

தமிழ் திரைப்பட உலகில் 40 ஆண்டு காலம் நிலைத்திருந்த தங்கவேலு 800 க்கு மேற்பட்ட திரைப்படங்களிலும் 10 ஆயிரத்திற்கும் அதிகமான நாடகங்களிலும் நடித்துள்ளார். முதன் முதலாக அவர் 'சதிலீலாவதி' படத்தில் நடித்தார். கல்யாணப் பரிசு, உத்தம புத்திரன், அலிபாபாவும் 40 திருடர்களும், திருடாதே போன்றவை அவரின் பிரபல படங்கள்.

இவருக்கு கலைவாணர், கலைமாணி விருதுகளும் இவரின் கலைப்பணிக்காக வழங்கப்பட்டன.

### காயமடைந்தவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியில் கடந்த 24 ஆம் திகதி துவிச்சக்கரவண்டி லொறி விபத்தில் காயமடைந்திருந்த ஒருவர் நேற்று மரணமடைந்தார்.

கிருஷ்ணபிள்ளை நடேஸ்வரி (வயது 18) என்பவரே மரணமானவராவார். இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (88)

### மண்ணெய் விநியோகம்

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க பாவனையாளர்களுக்கான 18-வது சுற்று 3 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகம் நடைபெறுகின்றது. விரைவில் குறிப்பிட்ட மண்ணெண்ணெயைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமுகாமையாளர் கேட்டுள்ளார்.

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# யப்பானின் புதிய அவதாரம்

# பணத்தால் பாவங்கள் கழுவப்படுகின்றன

“சோழியன் குடுமி சும்மாக ஆடாது” என்றே யப்பானின் ஒவ்வொரு செயற்பாட்டையும் பார்க்குமிடத்து சொல்லத் தோன்றுகின்றது. மாறிவரும் உலகில் தனக்கு மாறான, பாதகமான சூழல் தோன்றும் போதெல்லாம் யப்பான் மேலும் விழிப்படைகின்றது மாற்று வழிகளைக் கையாண்டு மாறிவரும் சூழலுக்கேற்ப தன்னை இயைபுபடுத்திக் கொள்கின்றது. இச்சந்ததி அதன் வரலாற்றடியாக பிறந்த சமூகப் பண்பென சிலர் கருதுகின்றனர். எது எப்படியிருந்த போதும் “மாற்றம் என்பதே உலகில் என்றும் மாறாதது” என்பதே அவர்களின் மிக பிரபலமான முதுமொழி. ஏனென்றால் புதிய உலக சூழலிலே யப்பானின்பொருண்மியம்பின்னடைவுகளையே தொடர்ந்து சந்திக்க நேரிடும் நிலையிலும், அமெரிக்காவோடான வணிகப் பிணக்குகள் இன்னமும் தீராத நிலையிலும் 3 மாதம், 6 மாதம் என அரசாங்கங்கள் மாறும் நிலையில் அது தன்னம்பிக்கையோடு செயற்படும் விதம் கவனிக்கப்பட வேண்டியதே. அதிலும் குறிப்பாக 40 ஆண்டுகளுக்குமேலாக யப்பானைத் தொடர்ந்து ஆண்டு வந்த LDP எனப்படும் தாராண்மைவாத சனநாயகக் கட்சி அண்மையில் எதிர்க்கட்சியான சோசலிச சனநாயகக்கட்சியிடம் ஆட்சியை இழந்தது. தாராண்மை வாதக் கருத்துக்களைக் கொண்ட முதலாவது சோசலிசப் பிரதமராகப் பதவியேற்ற ரொமிச்சி முரயாமா [Tomiichi murayama] வின் கொள்கைகள் எவ்வாறு யப்பானிய பொருண்மிய முறைக்குபொருந்தும் என ஐயம் எழுந்தது ஆனால் முரயாமோவோ இப்போது மிக இலகுவில் யப்பானிய அரசாங்கத்தை அதன் முன்னைய தொடர்ச்சி அறாமல் கட்சியின் நிலைப்பாட்டை மாற்றுவதன் மூலம் நடத்திச் செல்கின்றார்.

## அமைதிக் காவலன்

இவற்றினைவிடஇன்னொரு பிரதான மாற்றம் இப்பொழுது நிகழத்தொடங்கிவிட்டது. ஆக்கிரமிப்பாளராக, பெரும் போர்க் குற்றங்கள் இழைத்ததாககுற்றம்சாட்டப்பட்ட யப்பானிய இராணுவம் இப்போது அமைதிப்படையணியாக உலகில் செயற்படதொடங்குகின்றது. ருவாண்டாவிற்குயப்பானியபடைகள் அமைதிப் பணிக்காக இப் போது செல்லத் தொடங்குகின்றன. அதுபோலவே பாதுகாப்புச்சபையின் புதிதாக இடம் பெறக்கூடும் என்று கருதப்படும் நிரந்தர உறுப்பினராகப் போகும் நாடுகளின் பட்டியலில் யப்பான் முன்னணியில் திகழ்கின்றது ஏனெனில் இப்போது ஐ.நா.வின் ஆண்டுச் செலவில் 12.4 விழுக்காடு வரை யப்பானே செலுத்துகின்றது. இது விரைவில் 15 விழுக்காடாக உயர்த்தப்படும். அப்போது தமக்கான அங்கத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுவிடும் என யப்பான் யதார்த்தமாக நம்புகின்றது. ஏனென்றால் ஐ நாவுக்கு பணமே பிரதானம் என்கின்றனர் யப்பானியர்.

> தனது போர்க்கால குற்றங்களை ஈடு செய்ய 100 கோடி டொலர் பெறுமதியான பாரிய திட்டமொன்றை யப்பான் அறிவித்துள்ளது. இதன் பெயர் “அமைதிக்கும் நட்புறவுக்குமான நிதியம்”

இவ்வாறாகயப்பான் தனது தோற்றத்தை இப்போது அமைதி காப்போனாக மாற்றமுயல்கின்றது. ஏனென்றால் அண்மைக் காலமாக பலஆசிய நாடுகள் அதிலும் குறிப்பாக யப்பானின்பொருண்மியநிலை விரிவாக்கத்தை அதிகம் விரும்பாத சீனா, தென்கொரியா, போன்றவை இரண்டாம் உலகப் போரின் போது யப்பானிய இராணுவம் இழைத்த கொடுமைகள் குறித்து பலத்த கண்டனம் தெரிவிப்பதோடு நட்டஈடும் கோரிவருகின்றன: இப்போது பல கொடுமைச் சம்பவங்கள் பகிரங்கப்படுத்தப்படுகின்றன. கொரியா வியட்னாம், பிலிப்பைன்ஸ் நாடுகளைச் சேர்ந்த யப்பானிய போர் வீரரின் பாலியல் அடிமைகளாக, வசதிப் பெண்டிராக பலவந்தப் படுத்தப்பட்ட பல்லாயிரம் பெண்கள் நட்டஈடு கோரி சட்டரீதியாக நடவடிக்கைகள் எடுக்கமுயல்கின்றனர். எனவே யப்பான் இச்சிக்கலை எதிர் நோக்க தந்திரமான அணுகுமுறையொன்றை வகுத்து செயற்படுகின்றது.

## பணமும் பாவமும்

எனவே இப்போது யப்பானின் முதல் சோசலிசப் பிரதமர் எனப்படும் முரயாமோ பகிரங்கமாக வருத்தம் தெரிவிக்கின்றார்; மன்னிப்பும் கோருகின்றார். யப்பானால் பாதிக்கப்பட்ட வியட்னாம், மலேசியா, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ் சென்று நேரடியாகவும் மன்னிப்புக் கோரினார். இரண்டாம் உலகப் போரில் இறந்த அவ்வவ் நாட்டு போர் வீரர்நினைவிடங்கட்குசென்று மலர் வளயம் வைக்கின்றார். அத்தோடு நட்டஈடு கோரும் சிக்கலை சமாளிப்பதற்கு 100 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான 10வருடங்கட்கு நீளும் பெரும் திட்டமொன்றை இப்போது அறிவிக்கின்றார். இத்திட்டம் யப்பானின் இராணுவத்தால் வசதிப் பெண்டிராக கொடுமைப்படுத்தப்பட்ட பெண்கட்கு தனித்தனி நட்டஈடு வழங்குவதை' தவிர்க்கின்றது. அதற்குப் பதிலாகஅவர்களின் பொதுவான வாழ்க்கைத் தரத்தை, கல்வி நிலையை, வேலை வாய்ப்புக்களை அதிகரிக்க இளைஞர் பரிமாற்றத் திட்டங்களை மேற்கொள்ள போர் அழிவுகள், தாக்கங்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள மட்டுமே பயன்படுத்தப்படும் என மிகத் தந்திரமாக அறிவித்துவிட்டது இதனால் நட்டஈடு கோரிய பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்புக்கள் பெருத்த ஏமாற்றத்தை அடைந்துள்ளன. இவர்கள் இப்போது தமது சினத்தை தெரிவிக்கின்றனர்.

அதுமட்டுமன்றி தனதுயென் பணத்தை, ஆதரவிலான தொழில் நுட்பத்தைக் காட்டி பல நாடுகளின் வாயையும் அடைக்கச் செய்கின்றது. வியட்னாமுக்கோ கூடிய உதவியும் பெருமளவு முதலீடும் செய்வதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. புதிய மூலதனங்களை யப்பானிடமிருந்து எதிர்நோக்கும் பிலிப்பைன்ஸ், மலேசியா போன்ற நாடுகளும் இப்போது அடக்கியே வாசிக்கின்றன. இங்கு ஒரு முக்கிய தகவல் குறிப்பிடப்பட வேண்டும். மேற்குலக வணிகப் போட்டி காரணமாக யப்பான் இப்போது தனது அண்டை கிழக்கு ஆசிய நாடுகளோடு ஒரு பாரிய பொருண்மிய செல்வாக்கு வட்டத்தை உருவாக்கவே விரும்புகின்றது. அதுபோலவே மலேசியா போன்ற நாடுகளும் ஐரோப்பிய ஒன்றியம் நப்தா (NAFTA) போன்ற மேற்குலக பொருண்மிய சமூகங்கள் போல கிழக்காசியாவில் கிழக்காசிய பொருண்மிய குழுவொன்றை(EAEC- East Asian Economic Caucus) உருவாக்க யப்பானின் ஆதரவை நாடுகின்றன. இதுவரை காலமும்இவ்விடயத்தில்மௌனம் சாதித்த யப்பான் இப்போதுமனமாற்றம் கொள்ளத் தொடங்குவதாக கூறப்படுகின்றது. எனவே மலேசிய பிரதமர் மகாதிரோ” யப்பான் ஏன் தொடர்ந்தும் மன்னிப்புக் கோருகின்றது என்பது எனக்குப் புரியவில்லை 50 வருடங்கட்குமுன் நடந்தவற்றிற்கு யாரும் நட்டஈடு கோர முடியுமென்றால் 100, 200 வருடங்கட்கு முன் ஏகாதிபத்தியவாதிகளின்கொடுமை கட்கும் நாம் நட்ட ஈடு கோரலாம் அல்லவா? இவை நடக்கக் கூடிய காரியமா?' என்கின்றார்.

## இழைத்த கொடுமைகள்

ஆனால் இவர் இப்படிக்கூறினாலும் இப்போது வெளியாகும்யப்பானியரின்கொடுமைகள்பற்றிய கவல்கள்பெரும்அதிர்ச்சியூட்டக் கூடியவை ஏறக்குறைய இரண்டு இலட்சம்பெண்கள்- இவற்றில் கூடுதலாக கொரியப் பெண்கள்- பலவந்தமாக யப்பானிய இரானுவத்தின் வசதிப் பெண்டிர் ஆக்கப்பட்டமை பற்றியே இப்போது அதிகம் தகவல்கள் வெளிவருகின்றன சென்ற ஆகஸ்ட் 12ம் திகதி யப்பானிய இராணுவத்தால் பாதிக்கப்பட்டோரின் வாரிசுகள் இவர்கள். 13 ஆசிய நாடுகளை சேர்ந்தோர்- டோக்கியோவில் தமக்கான நட்ட ஈட்டை தருமாறு வற்புறுத்தினர். யப்பானிய இராணுவத்தால் பல ஆசிய நாடுகளிலும் கொல்லப்பட்ட மக்கள் குறித்தான தகவலும் இப்போது வெளியாகின்றன. இந்தோ சீனப்பகுதியில் 20 இலட்சம், பிலிப்பைன்சில் 11 இலட்சம், மலேசியா 50.000 பேர் சீனப்பகுதியில் 1 கோடி என திகைக்க வைக்கும் புள்ளி விபரமொன்றை யப்பானிய ஆதாரங்களை மேற்கோள் காட்டி அண்மையில் (Far Eastern Economic Review) இதழ் வெளியிட்டது “அடுத்த வருடம் தனது சரண் அடைவின் 50 வது நினைவு கூரலை யப்பான் பெரும் எடுப்பில் ஞாபகம் கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளும் நிலையில் இத் தகவல்கள் வெளிவருகின்றன. அத்தோடு யப்பான் சீனாவோடு தனது உறவினை முழுமையாக சீர் செய்ய முடியாத ஓர் நிலைக்கு இக் கொடுமைகள் பெரும் தடையாகவிருக்கின்றன. தனது வேதியல் நச்சு ஆய்வு கூடங்களில் சீனரை பரிசோதனைக்காக பலியாடுகள் ஆக்கியமை பல இலட்சக்கணக்கான சீனப் படை வீரர் உட்பட சீனமக்களை அநீதியாக கொன்றமை குறிப்பாக 1937 ம் ஆண்டு டிசம்பர் மாதமளவில் சீன நகரான நான்ஜிங்கில் (NANJING) 3 இலட்சம் அப்பாவி மக்களை படுகொலை செய்தமை இன்னமும் சீனரால் மறக்கப்பட முடியாதவையாகவேயுள்ளன.

## இன்னொரு பக்கம்:-

1992 ம் ஆண்டு வரை தனது போர்க்கால குற்றங்கள் பற்றி வாயே திறக்காதிருந்த யப்பான். அண்மைக் காலமாக காட்டி வரும் மனமாற்றத்தை உளப்பூர்வமானது என இன்று பலர் நம்பத் தயாராகவில்லை ஏனென்றால் இப்போக்கிற்கு முற்றிலும் வேறுபட்ட கடும்போக்கொன்றும் யப்பானில் நிலவுகின்றது. தனது முன்னைய இராணுவ பாரம்பரிய சிறப்பினை மேன்மைப்படுத்தும் தீவிரப் போக்கும் அங்குள்ளது என்பதை பலரும் சுட்டிக் காட்டுகின்றனர் இதற்கு தாரணமாக சென்ற ஆகஸ்ட் 14-ம் திகதி நடைபெற்ற இரு வேறு நிகழ்ச்சிகளை இவர்கள் உதாரணம் காட்டுகின்றனர். ஆகஸ்ட் 14-ம் திகதியன்று யப்பான் சரணடைந்ததின் 49 வது ஆண்டு ஞாபகார்த்தமாக போரின் போது கொல்லப்பட்டோர் உறவினர் முன்னிலையில் தலைநகரில் நடைபெற்ற விழாவின் போது பேசிய முரயாமோ தமது யப்பானிய இராணுவத்தால் பாதிக்கப்பட்ட ஆசிய மக்களிடம் பகிரங்க மன்னிப்பு கோரினார். ஆனால் அதே சமயம் தலை நகரின் இன்னொரு புறத்திலே போரின் போது இறந்து பட்ட 26 இலட்சம் படையினரின் ஞாபகார்த்தமாகவும் யப்பானின் பாரம்பரிய இராணுவ மேன்மையினை விளக்கும் குறியீடாகவும் விளங்கும் பெரும் விவாதத்திற்குரிய யசுக்குனி நினைவாலயத்தில் [Yaskuni Shrine] முரயாமாவின் அமைச்சரவை உறுப்பினர் 6 பேர் கலந்து போர் நடைபெற்ற காலகட்டத்தை சிறப்பிக்கும்வகையில் பேசினர். அது போலவே கடந்த 3 மாதத்திற்குள் யப்பானின் போர்க்கால குற்றங்களை மறைத்து யப்பான் எவ்வித தவறும் விடவில்லையென பேசிய இரு அமைச்சர் பதவி விலக்கப்பட்டனர்; அத்தோடு போரின் போது இறந்து விட்ட வீரரின் மனைவிகள், பிள்ளைகள் போன்றோரை உள்ளடக்கிய 40இலட்சம் பேரை உறுப்பினராகக் கொண்டஅமைப்பொன்று போரை கண்டிப்போரை எதிர்த்து வருகின்றது. இவற்றினைவிட தீவிர வலது சாரி அமைப்புக்கள் பல போரை ஆதரித்தும் அதை எதிர்ப்போரை அச்சுறுத்தியும்வருகின்றன. இவற்றுள் குறிப்பிடத்தக்கது Uyoku எனப்படும் அமைப்பாகும்.

## அமெரிக்கநய வஞ்சகம்

இத்தகையதொரு தீவிர நிலைப்பாட்டைஇவர்கள் எடுப்பதற்கு தாம் தேவையற்ற வகையில் அணுக்குண்டுவீசி அழிக்கப்பட்டு அவமானப் படுத்தப்பட்டதாக இவர்கள் கருதுவதும் ஒரு காரணமாக கூறப்படுகின்றது. 1945-ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ம் 9-ம்திகதிகளில் முறையேகிரோசிமாவிலும்நாகசாக்கியிலும்அணுக்குண்டுகள் வீசி இரண்டரை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

பாலகுமாரன்

---

ஐந்தாவது தடவையாக தடா சட்டம் மீண்டும் நீடிக்கப்படுமா? இன்று இந்தியாவில் எழுந்துள்ளகேள்வி இது.

# தடா; இதுவரை சாதித்தது என்ன?

தியப் புலனாய்வுத்துறையின், விடாப்பிடியான பொய்த்துப் போனசித்தாந்தங்களும், தடா சட்டத்தின் எல்லை கடந்த

சீக்கியர்கள் மீதும் பதிவாகி இருப்பதும் குறிப்பிடத்தக்கது இதேவாறான நிலை பாபர் மசூதி தகர்ப்பின்பின்பும்இடம்

வில் எழுந்துள்ளகேள்வி இது. பஞ்சாப், ஜம்முகாஷ்மீர் மாநிலங்களில் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக 1985 இல் கொண்டு வரப்பட்டதாகக் கூறப்படும் இத்தடா [TADA -Terrorist and Disruptive Activities Prevention Act] சட்டம். இன்று அரசியல் பழிவாங்கல்களுக்கும், மதகாழ்ப்புணர்ச்சிகளுக்கும் வடிகாலாக மாறிவிட்ட நிலையில், இச்சட்டத்தின் நீடிப்பு பற்றி வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

சாதாரண இந்திய குற்றவியல் சட்டங்களிலும், தடா சட்டம் பல விடயங்களில் வேறுபட்டு நிற்கின்றது. இந்த வேறுபாடுகளே, பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளன.

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கிலிருந்து பம்பாய் குண்டு வெடிப்புக்களின் சஞ்சய்தத் கைது வரை, பொலிசார் தாங்கள் விரும்பிய திசைக்கு, தங்களுக்கேற்றாற் போல் வழக்குகளின் போக்கினை கொண்டு செல்லவும் தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களை வெளிக்காட்டவும், தடா சட்டம் பெரிதும் உதவியிருக்கிறது.

இதனடிப்படையில், தடா சட்டத்தின் முக்கிய அம்சங்களை நோக்கும் போது, இது வெளிப்படையாகவே தெரியக் கூடியதாயுள்ளது.

சாதாரண இந்திய குற்றவியல் சட்டங்களின்படி, ஒருவரை குற்றவாளி என பொலிசார் கைது செய்தால் அவர் குற்றவாளி என பொலிஸார் நிரூபிக்கும் வரையில் சட்டம் அவரை நிரபராதியாகவே பார்க்கும் ஆனால் தடாவின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் அவர் தடாவின் கீழ் கைதானார் என்ற ஒரே காரணத்தினால் சட்டம் அவரை பயங்கரவாதியாகவே நோக்கும் இந்த நிலைப்பாடு இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவின் கொலை வழக்கில் பொலிசாரின் சகட்டு மேனியான சந்தேகங்களுக்கும் கைதிகளுக்கும் பெரியளவில் கைகொடுத்திருக்கிறது. குற்றம் நிரூபிக்கப்பட முன்னமே குற்றம் சாட்டப்படுபவர் எவரும் குற்றவாளியே என்ற போக்கினை பொலிசாருக்கு இது தந்திருக்கிறது.

இரண்டாவதாக, குற்றவாளிகள் என கைதாகுபவர்களின் மேலான குற்றத்தை நிரூபிக்க வேண்டிய பொறுப்பு (Burden Of Proof) பொலிசாரைப் பொறுத்த விடமாக, குற்றவியல் சட்டங்கள் கூறுகின்றன. ஆனால் தடாவின் கீழ் கைதாகுபவர்களின் குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு பொலிசாரிடம் இருப்பதில்லை. இதனடிப்படையில், தமிழகத்தில் மட்டும் 235 தடாக் கைதிகள் காவலில் தொடர்ந்தும் வைக்கப்பட்டுள்ளனர்.

மூன்றாவதாக, குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து பொலிசார் பெறும் வாக்கு மூலங்கள், அவர்களிடமிருந்து எந்த முறையில் பெறப்பட்டாலும் செல்லும் என்பதும் தடாவின் அதிகாரங்களில் ஒன்று. பொலிசார் பலவந்தமான முறையில் பெறும் வாக்குமூலங்கள், சரியான வழியில் பெறப்பட்டவையா என்ற விசாரணைகள் தேவையற்ற ஒன்றாக தடாச்சட்டத்தில் கணிக்கப்படுகின்றன. அடிப்படை மனித உரிமைகளில் ஒன்றான, ஒருவரிடமிருந்து பெறும் வாக்குமூலம், அவருக்கு எதிராகப் பயன்படுத்தப்படக்கூடாது என்ற நிலைப்பாடு தடாவின் முன் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. தடாவின் இந்த செயற்பாடு கூடுதலாக, காஷ்மீரில், முஸ்லிம்களை கைது செய்வதில் செயற்படுத்தப்பட்டிருக்கிறது என இந்திய மனித உரிமை அமைப்புக்கள் தெரிவித்துள்ளன. மதக் காழ்ப்புணர்ச்சிகளை, பலவந்தமாக பெறும் வாக்குமூலங்கள் மூலம் வடிகாலாக்கி கொள்ளலாம் என்றே இந்தியப் பொலிசார் நடந்து வருவதாகவும் இவ் அமைப்புக்கள் சுட்டிக் காட்டியுள்ளன. குற்றம் சாட்டப்பட்டவர்களிடமிருந்து பெறப்படும் வாக்குமூலங்களின் அடிப்படையில், கைது செய்யும் அனுமதிப்பத்திரங்கள் இன்றி யாரையும் பயங்கரவாதிகள் என கைது செய்யவும் தடா வழிவகுக்கின்றது.

நான்காவதாக, தடாவழக்குகளின் விசாரணைகள், சா

---

## ரகுராம்

---

தாரண நீதிமன்றங்களில் நடத்தப்படாது, இதற்கென விசேட நீதிமன்றங்களில் விசாரணைகள் நடத்தப்படும் நிலையாகும் இந்த விசேட அமைப்பின் மூலம் ராஜீவ் கொலை வழக்கின் பல முக்கிய விசாரணைத் தொகுதிகள் மறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பகிரங்க விசாரணைகளில் வெளியாகும் தகவல்கள் மக்களிடம் உணர்வலைகளை எழுப்பலாமென கருதும், பொலிசாருக்கு, இவ்வாறான விசேட நீதிமன்றங்களின் விசாரணைகள் தங்களுக்கேற்ற வகையிலான வழக்கின் தொடர் கட்டங்களை அமைத்து தருவதற்கு அவகாசம் பெரிதும் பெறப்படுகின்றது.

ஐந்தாவதாக, சாதாரண குற்றவியல் சட்டங்களின்படி, கைதாகிய ஒருவரின் மேல், அறுபது நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கலாக வேண்டும். இதன்படி கைது செய்யும் பொலிசாரின் வாதங்கள் நீதிமன்றின் பார்வைக்கு விரைவாக எடுத்துச் செல்லப்படும். ஆனால் தடா சட்டத்தின் படி மேற்படி சட்டத்தின் கீழ் கைதாகிய ஒருவரின் மேல் ஒருவருடம் கழிந்தும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யமுடியும். இதன் மூலம் அரசியல் பழிவாங்கலின் பொருட்டு, ஒருவரை, விசாரணைகளின்றி தடுத்து வைக்கும் அதிகாரம் பொலிசாருக்கு வழங்கப்படுகின்றது.

ஆறாவதாக, தடா வழக்குகளை விசாரணை செய்யும் நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் அரசிடமே உள்ளதை குறிப்பிடலாம். வழமையான நீதிமன்றங்களின், நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம் இந்திய உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியிடம் இருக்கும்போது, அரசாங்கம் நியமிக்கும் விசாரணையாளர், தடா நீதிமன்றங்களில் விசாரணைகளை மேற்கொள்வது, நீதித்துறையின் நம்பகத்தன்மையை பாதிப்பதாகும்.

தடா வழக்குகளில் கைதாகிய ஒருவர் பிணையில் வெளிவருவதென்பது இயலாதகாரியம் அவ்வாறு அவர் பிணை கோருமிடத்து, தனது விண்ணப்பத்தை புதுடெல்லியிலுள்ள சுப்ரீம் கோர்ட்டுக்கே அதை அவர் அனுப்ப முடியும் பம்பாய் குண்டு வெடிப்புக்களில் கைதாகியுள்ள பிரபல திரைப்பட நடிகர் சஞ்சய்தத், எவ்வளவு முயன்றும், பிணையில் வரமுடியாமலிருப்பதும் தடாவின் அகலமான பிடிகரங்களுள் ஒன்றாகும். தடாவில் கைதாகியுள்ள நபர், ஒருவாறு நிரபராதி என விடுதலை செய்யப்பட்டால், தனது கைதுக்காக அவர், நட்டஈடு கோரி வழக்குத் தாக்கலும் செய்ய முடியாது. வழமையான சட்டங்களில், எக்காரணம் கொண்டும் நிரபராதி ஒருவன் தண்டனை அனுபவிக்கக் கூடாது என்ற பிரதான கோட்பாடு, தடாவில் சிவப்புக் கோடுகளால் விலக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக பல வழிகளிலும் தடா, தன் அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும், இவை இச்சட்டம் அமுலாகி ஒன்பது வருடங்களின் பின்பே பெரிதாக பேசப்படுவதற்கு காரணம் என்ன? காஷ்மீரின் சுலைமானோ, பஞ்சாப்பின் பல்பீர்சிங்கோ, தமிழ்நாட்டின் ரவிச்சந்திரனோ தடாவில் கைதாகும் வரை கொடூரம் புரியாத இச்சட்டத்தின் அதிகாரங்கள், இன்று பெரிய புள்ளிகளின் வாரிசுகளும், நிழல் உலகின் மன்னர்களும் கைதாகும் போதுதான் வெளியே தெரிவதென்பது வேடிக்கையானதுதான்.

இந்தியா பூராவிலும் கடைசியான புள்ளிவிபரங்களில் 67,509 தடா வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இவ்வழக்கில் அனேகமானவை விசாரணைகளின் பின் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால் தடா அமுலாக்கப்பட்ட நோக்கத்தில் வெற்றி கண்டுள்ளதா என கேள்வி எழுகின்றது. இன்னும் விசாரணைகளுக்கு வராமலிருக்கும் வழக்குகளிலும் எத்தனை நிராகரிக்கப்படப்போகின்றன என்பன பொறுத்திருந்து பார்க்க வேண்டிய விடயம். நிராகரிக்கப்படும் ஒவ்வொரு வழக்கும் தடாவின் அதிகாரங்கள் எவ்வளவு தூரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்பதை காட்டுகின்றது.

தமிழ்நாட்டைப் பொறுத்த மட்டில் கூட மாநில அரசின் அரசியல் பழிவாங்கலும், இந்

...போகவைத்துள்ளன. தடாவின் வாழ்வுக்காலம் கேள்விக்குறியாகியுள்ள இக்சட்டத்தில் தாங்கள் பிடித்துவைத்துள்ள கற்பனை உருக்கள் சிதறாவண்ணம் மாநில அரசும் இந்தியப் புலனாய்வுத் துறையும் ஏதோ ஒரு விதத்தில் ராஜீவ் கொலை வழக்கையும் தங்கள் திசையிலேயே கொண்டுசெல்ல எத்தனிக்கும் என்பது நிச்சயமானது.

எனவே தடா இன்னொரு உருவில் என்றும் இந்தியாவில் உயிர்வாழ்ந்தே தீரும் எனக் கொள்வதில் பிழையிருப்பதாக தெரியவில்லை.

இதே வேளை தடாச்சட்டம், மீண்டும் நீடிப்பதை இந்திய மத்திய அரசு விரும்புவது போல் அதன் சிரேஷ்ட அமைச்சர்களின் சிலரது அறிவிப்புக்கள் வெளிவரும்வேளை அமைச்சரவைக்குள்வேயே அதற்கு எதிரான கருத்துக்களும் எழுந்து வருகின்றன.

தடாச் சட்டத்தின் மூலம். இந்துக்கள் அல்லாத சிறுபான்மையினர் பழிவாங்கப்படுவதை, தடாச்சட்டத்தை எதிர்க்கும் அமைச்சர்கள் வலுவான வாதமாக காட்டும் வேளை. இவர்கள், உண்மையில் சிறுபான்மையினர் மேல் கரிசனையால் தடா நீடிப்பை எதிர்க்கிறார்களா என்பது ஆராயப்படவேண்டிய விடயம் பலம்மிக்க வாக்கு வங்கியொன்றை இழப்பதற்கு இவர்கள் தயாராக இல்லை என்பதே உண்மை நிலையாகும்.

தடாச் சட்டம், இந்துக்கள் பெரும்பான்மையாக வாழும் ராஜஸ்தானில் கூட, முஸ்லிம் மக்கள் மீதே தனது பிடியை இறுக்கியிருப்பதை, புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன அங்கு பதிவான 228 தடா வழக்குகளில் 101 வழக்குகள் முஸ்லிம்கள் மீதும், 96

...யில் இந்து மத அடிப்படைவாதிகள் நடத்திய கோரத்தனங்களுக்கு பலியாகிய முஸ்லிம்கள் மீதே தடா கைவரிசையைக் காட்டியிருக்கிறது. மசூதி தகர்ப்பில் ஈடுபட்டும், வன்முறைகளிலும் இரத்த ஆறு பெருக்கெடுத்தோடச் செய்த இந்துதத்துவ அடிப்படைவாதிகள் பக்கம் தடா திரும்பவில்லை என்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

ஆந்திரா, கேரளா போன்ற மாநிலங்களில் இயங்கும் நக்ஸல்பாரி இயக்கங்களான மக்கள் போராட்ட குழுக்களின் மீதும் தடா பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அரசியல் சித்தாந்த வேறுபாடு, அங்கு அரசியல் பழிவாங்கலுக்கு கொண்டு செல்ல தடா உதவியிருக்கிறது

இந்தநிலையில் மீண்டும் தடா சட்டம் நீடிக்கப்படுமானால் தடாவின் கீழான அனைத்து வழக்குகளும் மீண்டும் மறுபரிசீலனை செய்யப்படும் என உள்துறை இணை அமைச்சர் ராஜேஷ் பைலட் தெரிவித்துள்ளார். அத்தோடு, இதுவரை காலமும் வழக்கின் ஆதாரமாக, குற்றஞ்சாட்டப்பட்டவர்களிடமிருந்து பலவந்தமாக பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையை தளர்த்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதன்படி, வாக்குமூலத்தில் சம்பந்தப்பட்டவர், நீதிபதி முன்னிலையிலேயே வாக்குமூலத்தில் கையெழுத்திட வேண்டும் என புதிய விதி அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய விதி, பொலிசார் இதுவரை காலமும் பலவந்த அடிப்படையில் பெற்ற வாக்குமூலங்களை பயனில்லாமல் செய்துவிடும் எனக் கூறப்படுகிறது. அவ்வாறானால் ராஜீவ் கொலைவழக்கு, பம்பாய் குண்டு வெடிப்புக்கள் உள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறுகதை

# இணையும் கரங்கள்

டாக்டர் வசந்தி மேசை முன் அமர்ந்து அன்று நடைபெற்ற ஆபரேசன் கேஸ்களின் பதிவேடுகளைப் புரட்டிக் கொண்டிருந்தாள். நோயாளிகளின் இரத்த அழுத்தம், வெப்பநிலை முதலியவை அங்கே பதியப்பட்டிருந்தன. அவற்றை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தவளை டொக்! டொக்! என்ற காலடிச் சத்தங்கள் நிமிர்ந்து பார்க்க வைக்கிறது.

அவள் எதிரே டாக்டர் நாதன் புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தான். பிரபல்யமடைந்து வரும் சர்ஜனான அவன் சிறந்த கைராசிக்காரன் என நோயாளர்களால் மட்டுமன்றி மற்றும் யாவராலும் புகழப்படுவதுடன் பாராட்டுக்களையும் பெற்றுக் கொண்டிருந்தான். அண்மையில் தனது படிப்பை முடித்துக் கொண்டு லண்டனிலிருந்து திரும்பி, யாழ் போதனா வைத்தியசாலையில் கடமையாற்றுகிறான். குறுகிய காலத்தில் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுவிட்ட அவன் கடமையே கண்ணென மதிப்பவன்.

ஒரு கணம் அவனை நிமிர்ந்து பார்த்த வசந்தி, சட்டெனத் தன் இருக்கையை விட்டு எழுந்து, 'குட்ஈவினிங் டொக்டர்' என்று வந்தனம் கூறினாள்.

'குட் ஈவினிங் வசந்தி எனி கொம்பிளிக்கேஷன்ஸ்?'

'நத்திங் டொக்டர், எவ்ரி திங் இஸ் ஓ கே'

'குட்!' என்று சொன்னவன், ஒரு தரம் அவளது முகத்தைப் பார்வையால் ஊடுருவினான்.

'ரைட்' ஐ வில் மீற் யூ லேற்றர்.'

சொன்னவன், திரும்பி நடந்தான். மீண்டும் 'டொக்! டொக்!' அவனது காலடிச்சத்தம் தேய்ந்து போனது கூடத் தெரியாமல் வசந்தி அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஐ வில் மீற் யூ லேற்றர்' அவனது குரல் மீண்டும் மீண்டும் அவளது காதுகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது.

'ஐயோ! அம்மா...'

நோயாளி ஒருவரின் குரல், அவளைத் தன்னிலைக்குத் திரும்ப வைத்தது. இருக்கையில் அமர்ந்து கொண்டவள், ஒவ்வொரு பதிவேடுகளையும் அவதானித்து அந்தந்த நோயாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய மருந்து வகைகளைப் பதியலானாள். பதிந்து முடிந்ததும் வார்ட்டிலுள்ள நோயாளர்களை ஒரு தரம் சுற்றிப் பார்வையிட்டாள்.

அவளது கால்கள் விடுதியை நோக்கிவிரையத்தொடங்கின அவளது சிந்தனைக் குதிரையோ அவளது நடை வேகத்தை முந்திக் கொண்டு விட்டது.

நான்கு நாட்களின் முன் ஒரு மாலைப் பொழுதில் டாக்டர் நாதன் அவளைத் தனிமையில் சந்தித்த நிகழ்வு அவள் மனக்கண் முன் நிழலாடியது.

''மிஸ் வசந்தி! ஏன் நீங்கள் திருமணமே செய்யிறதில்லை என்று சபதமா?''

இயல்பாகவேகேள்விக்கணையைத் தொடுத்தான் நாதன் ''இல்லை டொக்டர், ஆனால் ......திருமணம் குறித்து சில குறிக்கோள்கள் எனக்கு உண்டு.''

''அப்டடியென்றால்...''

''சீதனம் கேட்டு டிமான்ட் பண்ணுற ஆம்பிளையல நான் அடியோட வெறுக்கிறன்''

',மிஸ் வசந்தி! அப்படி நீங்க வெறுக்கிறதுக்கு ஏதோ பின்னணி உங்கட வாழ்க்கையில நடந்திருக்க வேணும் என்று என்று நான் நினைக்கிறன்; உண்மையா?' நாதனின் ஊக்கத்தை அவளால் மறைக்க முடியவில்லை.

★ ★

நீண்ட இடைவெளிக்குப் பின் எம். பி. பி. எஸ். இறுதிப் பரீட்சையை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்திருந்தாள். வசந்தி, வன்னி மண்ணின் வளம்மிகு வனப்புகளில் தனைமறந்து லயித்துப் போயிருந்த அவளை அம்மாவின் குரல் உலுப்பியது.

''அம்மா! என்னைக் கூப்பிட்டநீங்களே?''

''ஓம் பிள்ளை, வசந்தி இண்டைக்கு மாப்பிள்ளை வீட்டார் பொம்பிளை பாக்க வாறதெண்டிருக்கினம். அதுதான்........முகத்தைக் கழுவி வெளிக்கிட்டு நில்லன்''

''அம்மா, அதுக்கிடையிலை எனக்குக் கல்யாணத்துக்கு என்ன அவசரம்?'' கேட்க நினைத்தவள், தனக்குக் கீழ வரிசையாகக் காத்திருக்கும் மூன்று சோதரிகளின் நினைவு வரவே,. மௌனத்தைத் தழுவிக் கொண்டாள்.

மாப்பிள்ளை வீட்டார் வந்து, பெண்பார்க்கும் படலமும் இனிது நிறைவேறியது. மாப்பிள்ளையின் தாயார் மெதுவாகக் கதையைத் தொடங்கினாள்.

''எங்களுக்கு இவர் ஒரே ஒரு மகன்தான். இவருக்குக் கீழ இன்னும் இரண்டு பொம்பிளைப் பிள்ளையள் இருக்கினம்''

''ஓம், ஓம் ...அது எங்களுக்குத்தெரிஞ்சவிசயந்தானேஎங்களுக்கும் இவதான் மூத்தவ. மற்றவை மூன்று பேரும் படிச்சுக்கொண்டிருக்கினம்''

''நான் அதுக்குச் சொல்லவரயில்லை, எங்கடை மகன்தான் தங்கச்சிமாரையும் கவனிக்க வேணும். இவ்வளவு காலமும் இவர் உழைச்சதெல்லாம் மகனைப் படிப்பிச்சநேரம் ... [illegible] ... க்கு விட்டு என்ஜினியருக்குப் படிப்பிக்கிறதெண்டால்என்ன லேசான காரியமே?

''ஓ ......அது எங்களுக்கும் தெரிஞ்ச விஷயந்தானே''

அப்பா சொல்ல, மாப்பிள்ளையின் தாயார் நேராக விஷயத்துக்கு வந்தாள்.

''நான் இப்பவே விஷயத்தை நேராய்ச் சொல்லிப் போடுறன். தங்கச்சிமார் ரெண்டு பேரின்ரை பேரிலையும் ஆளுக்கு ரெண்டு லட்சம் போட்டு வைக்கவேணும். நான் இதை ஏன் சொல்ல வாறனெண்டால் ...... தம்பி கலியாணஞ் செய்திட்டால் பிறகு அதுகளை நாங்கள் என்னெண்டு கரை சேர்க்கிறது?''

''நீங்கள் சொல்றது எங்களுக்கு நல்லாய் விளங்குது. ஆனால்...... நானும் தனியனாய்க்கிடந்து இந்த மண்ணிலை வியர்வை சிந்தி, இரத்தத்தைப் பிழிஞ்சுதான் உழைச்சு என்ரை மகளை ஒரு டொக்டருக்குப்படிக்க வைச்சனான். இனி மற்றப்பிள்ளையளையும் படிப்பிக்கவேணும். என்னாலை தர முடிஞ்சதெல்லாம் ஒரு அஞ்சு லட்ச ரூபாய்க்காசுதான். அதுவே என்ரை தகுதிக்குக் கூடித்தான் பேரச்சு. அதுக்கு மேலை நீங்கள் தரச்சொல்லிக் கேட்டால் .... அது என் சக்திக்கு அப்பாற்பட்டது''

''ஓ!...... யாழ்ப்பாணத்திலை இருந்தும் தம்பிக்குப்பேசி வந்தவை. பதினைஞ்சு தாறதாய்ச் சொன்னவை. அந்தப் பொம்பிளை ஏ எல் தான் படிச்சதெண்டு தம்பிக்குப் பிடிக்கேல்ல. வேறையும் ஒரு பகுதி, கொழும்பிலை வீடும் காசும் கூடக் குறையத் தாறனெண்டு கேட்டவை. பொம்பிளை ஒரு பி. எஸ். ஸி ரீச்சர். அதுவும் தம்பிக்குப் பிடிக்கேல்ல.

இடையில் அம்மா பேசினாள்.

''நாங்களும் என்ன செய்யிறது. இன்னும் மூன்று குமர்கள் இருக்குதுகள், இப்ப கையிலை, மடியிலை கிடக்கிறதைக் குடுத்து இந்தக் கலியாணத்தை ஒப்பேத்திப் போட்டுப் பிறகுதான் அதுகளுக்கும் ஏதும் தேடவேணும். எங்கடை நிலைமையையும் ஒருக்கால் யோசிச்சுப் பாருங்கோ''

வசந்திக்கு அம்மாவின் பேச்சைக் கேட்கக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. அம்மா ஏன் இப்படி இறங்கி வந்து பேசுகிறாள்?

''இன்னும் எத்தினையோ பேசி வந்தது பாருங்கோ, ஒண்டுக்கும் சாதகம் பொருந்தமாட்டன் எண்டிட்டுது. நீங்கள் கடைசி பத்தெண்டாலும் தந்தியளெண்டால், நாலைப் பிள்ளையளின்ரை பேரிலை போட்டிட்டு, ரெண்டைச்செலவுக்கும் எடுக்கலாம் மிச்சத்தை அவை என்னவும் செய்யட்டன்''

இது மாப்பிள்ளையின் பொறுப்புணர்வுள்ள தந்தையின் வாயிலிருந்து உதிர்ந்த வார்த்தைகள், அப்பாவின் முகம் சுருங்கிப்போவதை வசந்தி அவதானித்தாள்.

''நாங்கள் கேக்கிறது ஒண்டும் பெரிய காசில்லை. என்ரை பிள்ளைக்கு எவ்வளவு சம்பளமெண்டு உங்களுக்குத் தெரியுமே? அதைவிட அவனுக்கு இந்த வருஷ முடிவிலை 'ஸ்காலர்சிப்' ஒவறை கிடைக்கப்போகுது. அவன் வெளிநாட்டுக்குப்போனால் அங்கை ஒரு மாசத்திலை உந்தக்காசை உழைச்சுப் போடுவான்''

தாயாரின் பெருமிதம் செறிந்த வார்த்தைகளைக் கேட்க, வசந்திக்கு நரம்புகள் புடைத்துப் பொறுமைஎல்லையைக்கடந்து கொண்டிருந்தது. அப்பா தயங்கியவாறே,

''அப்பிடியெண்டால் ஒண்டைக்கூட்டித்தரத் தெண்டிக்கிறம். அதுக்கு மேலை எண்டால் நிச்சயமாய் என்னால ஏலாது''

சொல்லிவிட்டு அம்மாவைத் திருப்பிப் பார்த்துக்கொண்டார். வசந்திக்கு அம்மாவின் வாடிய முகத்தைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

''அப்படியெண்டால் சரிவராது. வாங்கோ நாங்கள் போவம்''

மாப்பிள்ளையின் தாயார் விருட்டென எழுந்து நடக்கத் தொடங்கினாள். மற்றவர்களும் அவளைப் பின்தொடர்ந்தனர். அவர்களது அநாகரிகச் செயலைக் கண்டு வசந்தியின் உள்ளம் தகிக்கும் அனலாகியது. அவர்களைப் பின்தொடர்ந்தவள், ஆத்திரத்தினால் நெஞ்சு படபடக்க, சுட்டெரிக்கும் வார்த்தைகளை அள்ளி வீசினாள்.

''நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேட்டுக் கொண்டு போங்கோ. உங்கடை மகனுக்கு நீங்கள் காசைச் செலவழிச்சுப் படிப்பிச்சுப் போட்டியள் எண்டு எங்களிட்டைச் சொல்ல உங்களுக்கு வெட்கமில்லையா? என்னையும் அப்பா படிப்பிச்சவர்தான் உங்கடை மகன் மட்டும்தான் சம்பளம் எடுக்கிறவர் என்று நினைக்காதையுங்கோ நானும்தான் உழைக்கிறன். ஏன் நாங்கள் உங்களிட்டை இதையே திருப்பிக் கேட்கக் கூடாது? என்ரை தங்கச்சிமாருக்கு நீங்கள் காசு கொடுக்கத் தயாரா? இனியாவது கொஞ்சம் சிந்திச் சுநடந்துகொள்ளுங்கோ''

மளமளவென்று பொரிந்து தள்ளிவிட்டுத் திரும்பினாள் வசந்தி. மகளின் வார்த்தைகளில் நியாயம் இருப்பதைஉணர்ந்து கொண்ட தாயும் தந்தையும் செய்வதறியாது வாயடைத்துப்போய் நின்றனர்.

மாப்பிள்ளையின் தாயினது குரல்மட்டும்தெளிவாகக் கேட்டது;

''நல்லகாலம் தப்பிட்டம் பெட்டை சரியான வாய்க்காரி போல கிடக்குது வசந்தியின் சீற்றம் தணிய நெடுநேரம் எடுத்தது 'திருமணம்' என்ற சொல்லே அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆணையும் பெண்ணையும் வெவ்வேறு கண்ணோட்டத்தில் பார்க்கும் இந்தச் சமூகத்தை அவள் அடியோடு வெறுத்தாள். பெற்றோரிடம் தனது நிலைப்பாட்டை விளக்கியவள், லீவு

(6ஆம் பக்கம் பார்க்க)

மலரன்னை

## காணாமல்போன கடலரசன்!

பூரணச் சந்திரனின்
பால் வெளிச்சத்தின் போது
பவனி வந்த
''கடலரசன்'' எங்கே?
தென்னிலங்கையில்
தேடிக் கொண்டிருந்தார்கள் ......

கற்பிட்டி கடல்
தங்களின் கட்டுப்பாட்டில் என்று
கவலையில்லாமல் வந்தவர்கள்
பாதிவழியில்
காணாமல் போனார்கள் ... ...

எங்களின் கடற்பரப்பை
எவர்க்கும்
வாடகைக்குக் கொடுக்கவில்லை,
கடலரசனாக எவரையும்
பிரபாகரன்
ஆட்சியில் அமர்த்தவில்லை
சொல்லிக் கொண்டு எழுந்தவள்
நளாயினி ..........
அன்று சூரியனை உதிக்க வேண்டாம்
என்றவள்
இன்று சூரியனாக எழுந்தாள்!
அவள் எழுச்சி
தியாகத்தின் உச்சி!

ஜெயரட்ணம் சுரேஷ்குமார் - அச்சுவேலி

## ஆயிரம் தலைகளின் உண்மைச் சாபம்

யார் அனுமதித்தது தீக்குரலனை அங்கு?
பச்சைவர்ண வஸ்திரத்துடனும்
சர்ப்பாஸ்திரங்களுடனும்
புன்னகைத்துத் திரிகிறானே அங்கு?
அவன் வெடிச்சிரிப்பில் விருட்சங்கள் தீப்பிடிக்கின்றன
பாதிவானத்தில் பட்சிகள் கருகி
எரிந்த மரங்களில் விழுகின்றன
பிராணிகளும் புல்பூண்டுகளும் விஷமேறி மடிகின்றன.
தீக்குரலன் சிரிக்கிறான்
திக்குகள் இடிந்து விழவிழ
தீநாக்குகள் நீட்டி நீட்டி
தீக்குரலன் சிரிக்கிறான் மதம்கொண்டு.
இடம்வலம் தெரியாமல் சூரியன் தடுமாறுகிறது
இரவா பகலா இதுவென்றறியாமல்
நிலவு குழம்புகிறது
குளங்களும் வற்றிப் புழுதிகிளம்ப சிங்கத்தின்
கர்ஜனையுடன்
தீக்குரலனின் ரதங்கள் வேலிபிரித்துப் போகின்றன,
உயிரழிந்த தடங்கள் ஊரெங்கும்.
இன்னும் பனைகள் அங்கு நின்றிருக்கக் கூடுமா
தனித்து?

மடிநிறைந்த என்னருமைக் கிராமமே!
எழில் பொங்கிய உன்னரும் உயிர்முகம்
தீக்குரலன் விஷப்பல்லில் வெடித்துச் சிதறிற்றா?
வெளியும் காடுகளும் குடிசைகளும் சூழ
அழகிய மனதுடன்
இரண்டு கால் இரண்டு கை
மூக்கும் முழியும் வாயும் உள்ள
உண்மை மனிதர்தானே அங்கிருந்தார்.
அவர் பாடிய பாடல்கள்
அந்த மரங்களிலே பூத்திருந்தன
வேரடி மண்ணில் அவர் மனமெல்லாம் பரவிக்
கிடந்தது

ஏன் தீக்குரலனே அங்கு வந்தாய்?
எல்லாவற்றிலும் தீமூட்டிய உன்னை
யார் அனுமதித்தது?
பேய் மனத்தவனே!
உனக்கு பூவின் வாசம் புரியாது என்றெல்லோரும்
சொல்கிறார்கள்
உன் மூலம் வெடித்துப் போகட்டுமென்று
சபிக்கும் குரல் கேட்கிறது.

- கருணாகரன்

# யேசுராசாவுடன் நேர்காணல்

வவுனியா திலீபன்

கேள்வி: ஈழத்துப் போராட்ட இலக்கியத்தின் காத்திரம் பற்றியும் அதன் வளர்ச்சி பற்றியும் சொல்லுங்கள்?


பதில்: போராட்ட இலக்கியம் என்று சொல்லும் பொழுது ஒரு வரலாற்று முக்கியத்துவம், சமூக முக்கியத்துவம் இருக்கிறது. இரத்தமும் சதையுமாக அந்தக் காலத்திற்கு அந்தப் பிரச்சினைகளுக்கு உயிரைக் கொடுத்து என்றென்றும் நிலைத்து வாழக் கூடிய விதமாக அது அமைகிறது. இவற்றை விளக்குவதற்கு கலை இலக்கியங்களால் தான் முடியும். இது உணர்வுசார்ந்த விஷயம்.

அவ்வாறு பார்க்கையில் ஒரு வரலாற்றுப் பொறுப்பு கலைஞர்களுக்கு இருக்கிறது. போராட்டம் பற்றிய இதய பூர்வமான நம்பிக்கையோடு பொறுப்புணர்வோடு இந்தக் காலகட்ட அனுபவங்கள் பதிவு செய்யப்பட வேண்டும்.

போராட்டத்துடன் இதய பூர்வமாக இணைந்தவர்கள் அந்த அனுபவங்களைப் பெற்றவர்கள் தான் கூடிய பொறுப்புடன் இதை வெளிப்படுத்த முடியும். அது உண்மையாக இருக்கும். வீச்சுப் பொருந்தியதாக இருக்கும்.

வெளியில் உள்ளவர்கள் எழுத வேண்டாம் என்பதில்லை. அவர்கள் எழுதலாம். எழுதவேண்டும். ஆனால் உள்ளுக்கிருப்பவர்கள் தோய்ந்து வந்து எழுதும் போது, அது வீச்சுப் பொருந்தியதாக இருக்கும்- உதாரணம் போர் உலா இதே மாதிரி போராளியின் குருதிச் சுவடுகள்,' 'விழுதுகள்' அம்மாளைக் கும்பிடுகுரானுகள் போன்றன போராளிகளால் அல்லது போராட்டத்துடன் நெருங்கியிருப்பவர்களால் எழுதப்படுகின்றன. இவற்றைக் கட்டுரை என்றும் சொல்ல முடியாது; புனைகதை என்றும் சொல்ல முடியாது. இவை உண்மையைச் சொல்கின்றன. நெருக்கடியான வாழ்வின் அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன தமிழிலக்கியத்தில் இவை பெரும் பங்களிப்பு என்றே நான் சொல்வேன்.

போராளிக் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் கவிதைகள் முக்கியமானவை. போராட்ட கால நிகழ்வுகளையும் உணர்வுகளையும் இவரது கவிதைகள் துல்லியமாகப் பதிவு செய்கின்றன. இதேமாதிரி விடுதலைப் புலிகள் இதழில் நாக. பத்மநாதன் எழுதிய 'உருவகங்கள்' கவனத்திற்குரியவை.



கேள்வி; இந்த மண்ணில் அறியப்பட்ட முன்னணிப் படைப்பாளிகள் இந்தக் காலகட்டத்தில் படைப்பிலக்கிய முயற்சிகளிலிருந்து ஒதுங்கியுள்ளார்கள். இதைப் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்: எண்ணிக்கை அளவில் அதிகமாக எழுதிவரும் படைப்பாளிகள் ஒரு காலத்தில் பிரபல படைப்பாளிகளாக கருதப்பட்டனர். இவர்கள் சமீப காலத்தில் எழுதாமல் ஒதுங்கியிருப்பதை ஒரு நழுவல் போக்காகவே நான் கருதுகிறேன்- அவர்கள் சமூக அக்கறை என்று சொல்லி வந்த விஷயங்களை நாம் தற்போது சந்தேகிக்க வேண்டியதாகவே உள்ளது-

ஒரு ஒடுக்குமுறை அரசு அதி உச்ச இராணுவ வல்லாண்மையைக் கொண்டு தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க முனைகிறது- மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்- அதற்கெதிரான தற்பாதுகாப்பு யுத்தம் முன்னெடுக்கப்படுகிறது. மக்களும் இதற்கு ஒத்துழைக்கிறார்கள் அதாவது ஒடுக்கும் அரசு ஒடுக்கப்படும் இனத்தின் கலாசாரத்தை கௌரவிப்பதுபோலக் காட்டுவதற்காக பரிசுகளைக் கொடுக்கிற பொழுது அதை நாம் பெற்றுக் கொண்டால் மறைமுகமாக அந்த அரசு ஒடுக்கு முறை அரசு அல்ல என நாம் சொல்வது போல் ஆகிவிடும். அரசு தரும் பரிசுகளை நாம்புறக்கணிக்கத்தயாராக இல்லாத பொழுது, நடைமுறையில் இவர்கள் எவ்வளவு தூரம் பொறுப்புணர்வு கொண்டவர்கள் என்பதில் சந்தேகம் எழுகின்றது.

கேள்வி: புலம் பெயர்ந்த இலக்கியம் பற்றி விரிவாகச் சொல்லுங்கள்?

பதில்: புலம் பெயர்ந்தவர்களில் பலர் சொந்த இலாபத்திற்காக வெளிநாடு ஓடிச் சென்றவர்கள் தாம் சம்பாதித்த பணத்தையும் சில நாடுகளில் இத்தகைய கலாசார நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் ஊக்குவிப்புத் தொகையையும் பெற்றுக் கொண்டுதான் சஞ்சிகைகளை வெளியிடுகின்றார்கள். இச் சஞ்சிகைகளை வெளியிடும் சிறுகுழுவினர் அங்குள்ள ஏனைய புலம் பெயர்ந்த பெரும்பான்மையானவர்களிடமிருந்து தனிமைப்பட்டிருப்பதாக அறியக் கிடைக்கின்றது. திரிக்கப்பட்ட கருத்துக்களை சில சஞ்சிகைகள் பரப்புகின்றன. இங்குள்ள யதார்த்த நிலையுடன் தொடர்பற்றவர்களாக இருந்து கொண்டு ஏற்கனவே தமது அரசியல் சார்பு நிலைக்கேற்ப அல்லது தங்களுடன் தொடர்புடையவர்கள் வழங்கும் சில தகவல்களை வைத்து போராட்டத்திற்கு எதிரான பிரசாரங்களைச் செய்கிறார்கள். தாம் இங்கிருந்த போது தமது ஊரின் அனுபவங்களை வைத்து பழைய கதை பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். அதனால் புலம்பெயர்ந்த இலக்கியத்தினால் 'புதிய பங்களிப்பு' தமிழுக்கு வந்து சேருகிறது என்றுசொல்லமுடியாது.

> அ. யேசுராசா!
>
> ஈழத்து இலக்கிய உலகில் அறியப்பட்ட படைப்பாளி.
>
> கவிதை, சிறுகதைகளுடன் சினிமா, நாடகம் போன்ற துறைகளில் ஆழமான பார்வை கொண்டவர்.
>
> 'தொலைவும் இருப்பும்ஏனைய கதைகளும்' என்னும் இவரது சிறுகதைத்தொகுப்பு 1974-ல் வெளிவந்தது.
>
> 'அறியப்படாதவர்கள் நினைவாக'என்னும் இவரது கவிதைத்தொகுப்பு 1984-ல் வெளிவந்தது.
>
> குறைந்தளவு படைப்புகளைத் தந்த காத்திரமான படைப்பாளி இவர்
>
> 'அலை' இலக்கிய இதழில் ஆசிரியர் குழுவில் இருந்தவர். 85க்குப் பின்னர் இதன் ஆசிரியர் பொறுப்பை வகித்தவர்.
>
> திசை வார இதழில் துணை ஆசிரியராக பணிபுரிந்தவர். தற்போது கவிதை இதழின் ஆசிரியராக உள்ளார்.

கேள்வி: சமீப காலத்தில் ஈழத்தில் கலை, இலக்கிய படைப்பாளிகள் கூட்டம் ஒன்று புதிதாக அறிமுகமாகியுள்ளது. இதைப் பற்றிஎன்ன சொல்கிறீர்கள்?

பதில்: இவர்களின் கவிதைப் படையல்களில் ஆற்றல் வெளிப்படுவதை காண முடிகிறது. சிறுகதைப் படைப்பைப் பொறுத்தவரையில் ஒரு குறுகிய அறிமுகப் படைப்பாளிகளே நல்ல கதைகளை எழுதி வருகிறார்கள். இவர்கள் தமிழில் உள்ள மிக முக்கியமான படைப்பாளிகளின் நூல்கள் பலவற்றை வாசிக்க வேண்டும்- இவை அவர்களின் வளர்ச்சிக்கு உதவும். வாசிப்புக் குறைவாக இருப்பது அவர்களிடம் உள்ள ஆற்றல் வளராமல்போவதற்குக் காரணமாகி விடும்,

வசந்தன் நல்ல கதைகள் பலவற்றை எழுதியுள்ளார்- 'விடுதலைப் புலிகள்' இதழில் பல வெளிவந்துள்ளன. இவர் ஒரு போராளி என்பது குறிப்பிடத்தக்கது.

கேள்வி: ஈழத்து இலக்கிய சஞ்சிகைகள் பற்றியும் அவற்றின் போக்குப் பற்றியும் கொஞ்சம் சொல்லுங்கள்?

பதில்: இங்கு சஞ்சிகைகளை நடத்துகிறவர்கள் தனி நபர்களாக அல்லது ஒரு சிறு குழுவாக உள்ள பொழுது, பொருளாதார சிக்கல் காரணமாக நின்றுவிடுகின்றன. தொடர்ந்து வரும் சஞ்சிகைகளும் கூட ஏதோ ஒரு விதத்தில் மறைமுகமாக வேறு சில ஆதரவுகளைப் பெற்றவையாகத் தானிருக்கின்றன. இதற்கு எமது மக்கள் மத்தியில் தேசிய விழிப்புணர்வின்மை ஒரு பிரதான காரணம்.

வாசிப்போரில் பெரும்பான்மையானவர்கள் சுவாரசியமான விஷயங்களை விரும்புவதனால் இவர்கள் அத்தகைய முயற்சிகளுக்குத்தான் ஆதரவு கொடுப்பவர்களாக இருக்கின்றார்கள்.

எமது ஈழத்து சிறு சஞ்சிகைகள் ஒரு விதத்தில் தம்மில் தாம் முரண்பட்டாலும் கூட ஏதோ ஒரு விதத்தில் காத்திரமானவை.

கேள்வி: இங்கிருந்து புலம் பெயர்ந்து சென்று தமிழ்நாட்டில் வாழ்ந்து வரும் படைப்பாளிகளின் படைப்புகள் தமிழ் நாட்டில் அதிகளவில் வெளிவருகின்றன. இவற்றை ஈழத்து இலக்கியமாகக் கருதமுடியுமா? இவை எமது வாழ்வனுபவங்களை பேசுவதாக கருத முடியுமா?

பதில் அதிகமாக எழுதிவரும் சிலரைப் பற்றி சொல்வதாயின் இவர்கள்

(6ஆம் பக்கம் பார்க்க)

# நிறைவான கல்விக்கு வீடியோ விவரணச் சித்திரம்

## யாழ் கல்வி வலயம் 1இன் தயாரிப்பு

பாடசாலைக் கல்வியை முடித்து சொந்தக் காலில்-சொந்தப் பலத்தில் தங்கி நிற்கவேண்டியவர்கள் பெற்றோரிலேயே தங்கி வாழ்க்கையை ஓட்டுவது வேதனைக்குரியது. இந்நிலை இன்றைய கல்வித் திட்டத்தால் உருவானதே இதனை மாற்றி இவர்களின் எதிர்காலத்திற்கும், சமுதாயத்திற்கும், பயன்டக்கூடியதாக கல்விக்கொள்கையை மாற்றுவதை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே ''நிறைவான கல்விக்கு'' எனும் விவரணச் சித்திரம்என்கிறார் திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு ச. சுப்பிரமணியம் அவர்கள்

முதல் தடவையாக கல்வித் திட்டத்தில் புதுமையைப் புகுத்தி கல்வியை இலகுவாக்கும் நோக்குடன் யாழ் கல்வித் திணைக்கள வலயம் 1'நிறைவான கல்விக்கு'' எனும் வீடியோ விவரணச்சித்திரத்தைத் தயாரித்துள்ளது-இதுகுறித்து விபரங்களைத்திரட்டிக்கொள்ளும் முகமாக அவரை அணுகியபோது .........

கேள்வி:- ''நிறைவான கல்விக்கு'' எனும் விவரணச் சித்திரத்தை வீடியோ ஒளிப்பதிவாக இயக்குவதாக அறிகிறோம், அதனைப்பற்றி அறிமுகம் செய்வீர்களா?

பதில்:- ''கல்வி மனிதனைப் பூரணமாக்குகின்றது'' என்பார்கள். அடிப்படை அறிவு, பொருளாதார வளம், சமூக நீதியுணர்வு, நாட்டின் நற்பிரசை ஆகிய குணாதிசயங்களைக் கொண்ட பூரண மனிதனை உருவாக்குவதனையே கல்வி நோக்கமாகக் கொண்டுள்ளது- இதனைநிறைவான கல்வி என்கிறோம் பாடசாலைகள் சிறுவர்களை இலட்சிய மனிதர்களாக வழிப்படுத்துவதில் பெரும் பங்காற்றுகின்றனசிறுவர்கள் நிறைவான கல்வியைப் பெறுவதற்குப் பெரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள போதும் எதிர்பார்த்த பலனைப் பெறவில்லை எனவே இக்குறைபாட்டை நிவர்த்திக்க எடுக்கப்படும் ஒரு முயற்சியே இவ்விவரணச் சித்திரமாகும்.

கேள்வி: கல்வியின் பயனை எதிர் பார்த்தளவில் சிறுவர்கள் பெறவில்லை என்று கூறுகிறீர்கள் எவ் அம்சங்களைக் கொண்டு அவ்வாறு கூறுகிறீர்கள்?

பதில்: சிறுவர் யாவரும் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கு கந்த அடிப்படைக்கல்வியைப் பெற உரித்துடையவர்கள் என ஐ. நா- சிறுவர் உரிமைச் சமவாயம் கூறுகிறது- ஆனால் எமது நாட்டைப் பொறுத்தளவில் 85 வீத சிறுவர்களே பாடசாலைக்குச் செல்கிறார்கள் ஏனையோர் இன்னமும் பாடசாலைக்கே செல்லாதவர்களாகவுள்ளனர் இக்குறைபாடு போக்கப்பட வேண்டும்.

இவ் 85 வீத மாணவர்களில் ஆண்டு 11- இல் கல்விகற்க எஞ்சும் மாணவர்கள் 50-60 வீதமானவர்களே- ஏனையோர்பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிச்செல்கின்றனர் இவர்கள் அடிப்படைக் கல்வியை முழுமையாகப் பெறாது வெளியேறுவதால் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகளிலிருந்து தம்மை விடுவிக்க முடியாமல் அலைவதும் கஷ்ரமுறுவதும், சமூக விரோத செயல்களில் ஈடுபடுவதும் உவப்பானதல்ல.

பாடசாலையில் ஆண்டு 11 இல் 30-40 வீதமானோரே சித்தியடைகின்றனர் ஏனையோர் சித்தியடையாது வெளியேறுவதும் அடிப்படைத் தகுதி பெறாத நிலையைக் குறிக்கின்றது- இதுவும் ஓர் கசப்பான செய்தியே எனவே

'நிறைவான கல்விக்கு'' எனும் விவரணச் சித்திரம் ஒன்றை இயக்கிக் கொண்டிருந்த திட்டமிடல் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியத்துடன் ஒரு சந்திப்பு

கல்வியின் பயனை முழுச்சமுதாயமும் அடைய வேண்டுமானால் ஏதாவது ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது-

கபொத சாதாரணமற்றும் உயர்தர வகுப்புகளில் பயின்று தேர்வில் சித்தியடைபவர்களும் கூட தனக்கும் சமூகத்திற்கும், நாட்டுக்கும் பயனுள்ள பூரண மனிதர்களாக்கப்படவேண்டும் என்பது கொள்கை- ஆனால் இன்றைய நிலை அப்படியானதல்ல- தேர்வில் சித்தியடைந்தவர்கள் பலர் இன்னமும் பெற்றோரின் பாதுகாப்பில் தான் வாழுகிற நிலையைப் பார்க்கும் போது மாணவர்களைக் குறை கூறுவதை விட கல்வி முறைமையை திருத்தியமைக்க வேண்டும் என்றே எண்ண வேண்டியுள்ளது- கல்வியை எல்லாச் சிறுவர்களும் பெறுவதற்கு இலவசக் கல்வி முறை அமுலில் உள்ளது- ஆனால் கல்வியின் அரை குறைப் பயனைப் பெறுவதற்குக் கூட நாம் நிறையப் பணத்தைச் செலவு செய்ய வேண்டியுள்ளது- யாழ் மாவட்டத்தில் மட்டும் 11 கோடி ரூபாவை பெற்றோர் பாடசாலைக் கல்விச் செலவிற்குப் புறம்பாக செலவு செய்யும் நிலை அகல வேண்டும்- பாடசாலைக் கல்வியின் பெறுபேற்று வீதம் உயர்த்தப்பட வேண்டும்-அரசின் கல்வி வாய்ப்புகள் முழுமையான பயனைத் தரவேண்டும் என்றால் பாடசாலைக் கல்வியில் உள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டு சீர் செய்யப்பட வேண்டியுள்ளது-

மாணவர்கள் அறிமுறை அறிவியல் மட்டுமன்றி செயல்முறைத் திறனும் விருத்தி செய்யப்பட்டு தொழில் சார்நன் மனப்பாங்கும் விருத்தி செய்யப்படவேண்டியுள்ளது-

சில எழுத்துத் தேர்வுகளை மட்டும் வைத்துக் கொண்டு சிறுவர்களைப் புத்திசாலிகளாகவும், மந்த மாணவர்களாகவும் வகைப்படுத்தும் நிலை மாற்றியமைக்கப்பட வேண்டும் இவ்வித வகைப்படுத்தல் பல லட்சம் மாணவர்களின் கல்விக்குக் குந்தகமாக அமையும் நிலை சீராக்கப்பட்டுப் பொருத்தமான மதிப்பீட்டு நுட்பங்கள் புகுத்தப்பட வேண்டும்-

சிறுவர்களின் அறிமுறை அறிவை மட்டுமன்றி உடல், உளம், இரசஞான உணர்வுகளும் கூட விருத்தி செய்யப்பட வேண்டும்- அனைத்து மாணவர்களினதும் உடல் நலமும் சீராகப் பேணப்பட வேண்டும்-

தேர்வுப் பெறுபேற்று வீதம் உயர்த்தப்பட வேண்டியுள்ளது. யாழ் மாவட்டத்தைப் பொறுத்தளவில் க-பொ-த- சாதாரணதரத்தில் சித்திப்புள்ளிகளைப் பெற்றோரின் வீதம் பின்வருமாறு அமைந்துள்ளதை அவதானிக்கலாம்

| பாடம் | 89 | 90 | 91 | 92 | 93 |
|---|---|---|---|---|---|
| தமிழ் | 75 | 76 | 65 | 74 | 74 |
| கணிதம் | 43 | 41 | 29 | 36 | 37 |
| விஞ்ஞானம் | 37 | 44 | 42 | 27 | 33 |
| சமூகக்கல்வி | 60 | 57 | 45 | 54 | 60 |
| ஆங்கிலம் | 34 | 35 | 25 | 24 | 19 |
| சைவ சமயம் | 69 | 81 | 70 | 89 | 80 |
| றோ க. | 70 | 81 | 67 | 64 | 64 |
| றோ.க.அ | 66 | 92 | 82 | 77 | 89 |
| வர்த்தகம் | 72 | 78 | 67 | 79 | 77 |
| சித்திரம் | 37 | 22 | 37 | 45 | 23 |
| சங்கீதம் | 39 | 33 | 35 | 32 | 30 |
| விவசாயம் | 63 | 57 | 40 | 64 | 83 |

இப்பெறுபேற்று வீதம் உயர்த்தப்பட வேண்டியுள்ளது இன்று மாணவர்கள் பாடசாலைக்கல்விக்கென ஆறு மணித்தியாலமும் - தனியார் கல்விக்கென சராசரி ஆறு மணித்தியாலமும் நாளாந்தம் செலவு செய்தும் கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்தும் இறுதியில் பெறும் பெறுபேற்று வீதம் குறைவெனில் அதனைச் சீராக்க முனைய வேண்டியது அவசியமானதும் அவசரமானதும் கூட.

கேள்வி; இலங்கையிலேயே இவ்வாறான பெறுபேறு இருக்கும்போது யாழ் மாவட்டத்திலும் அவ்வாறு தானே இருக்கும்.

பதில்; நாம வளரும் சமுதாயம் போராடிக் கொண்டிக்கும் சமுதாயம் முன்னேறுவதற்கான வழி

(7ஆம் பக்கம் பார்க்க)

சசிகரன்

# ஆளும் கட்சியும் - எதிர்க்கட்சியும் விரும்பாத ஜனாதிபதித் தேர்தல்

பிரதான கட்சிகள் பூரணமாக விரும்பாத நிலையில் அரசியல் அமைப்பின் நிர்ப்பந்தத்தின் கீழ் ஜனாதிபதி தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுவிட்டது. தேர்தலுக்கான திகதியும் குறிக்கப்பட்டு விட்டது. கட்சிகள் தமது நிலையை குறுகிய காலத்தில் மீண்டும் உறுதிப்படுத்தும் பலப்பரீட்சைக்கான களத்தில் இறங்கியுள்ளன.

இதேவேளை நேற்றுபொது ஜன ஐக்கிய முன்னணியின் இருபத்திநான்கு மாகாண சபை உறுப்பினர்கள், தென் மாகாணசபை முதல் அமைச்சர் மகிந்தயாப்பா அபேவர்தனவுடன் அமைச்சரும், சுதந்திரகட்சி பொதுச் செயலாளருமான தர்மசிறி சேனாநாயக்கா தலைமையில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்தனர். இச்சந்திப்பு தென்மாகாணத்தில் ஏற்பட்டுள்ள இழுபறி நிலையைத் தீர்த்து வைக்கும்

குமா என்பது சந்தேகமே ஆகும்.

வாக்கு சிதைப்பில் ஐ. தே. க.

தென் மாகாணத்தில் அம்பாந்தோட்டை, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களும் மேல் மாகாணத்தில் கம்பஹா மாவட்டமும் பொது ஜன ஐக்கிய முன்னணியின் கோட்டை என வர்ணிக்கப்படும் பகுதிகள். இந்நிலையில் இங்கு முன்னணிக்கு கிடைக்க

தாகவும், நம்பகரமான தகவல்கள் கூறுகின்றன.

தென் மாகாணத்தின் ஐ தே கவுக்கு எதிரான வாக்குகள் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு சென்றடையாமல் அதனை சிதறச் செய்வதே டாக்டர் சந்திரா பேர்னாண்டோவின் அரசியல் பிரவேசத்தின் நோக்கம் என ஊகிக்கப்படுகிறது. தென் மாகாணம் ஒரு காலத்தில் ஜே. வி பி. யின் பலமான தளமாக இருந்ததும் ஐ, தே, க. விற்கு இங்கு

தீவிரமாகப் பாடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனைவிட காமினிக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டை கூறிவந்த தற்போதைய பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர மற்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் போல் பெரேரா ஒஸிஅபே குணசேகர, அனுரா பண்டாரநாயக்கா, சிசில்முனசிங்கா, ரட்ணசிறி ராஜபக்ஷ போன்றோரை வெளியேற்றி கட்சியில் தனது முழுமையான

# ஒரு விமானத்தின் மரண வாக்குமூலம்

விமானம் ஒன்று விபத்திற்குள்ளான பின் அவ் விபத்திற்கான காரணத்தைக் கண்டறிய பெரிதும் உதவி புரிவதுதான் ''கறுப்புப்பெட்டி'' இந்தப் பெட்டியை விமானிகள் அறை 'ஒலிப்பதிவு' எனலாம். அந்த அறையில் நடக்கும் உரையாடல்கள், விமானியின் பணி, நிறை, குறைகள், விமான எஞ்சின்களின் வேகம் மற்றும் பிற செயல்பாடுகளைத் தொடர்ந்து கண்காணித்துப் பதிவு செய்து கொள்ளும் பொறுப்பு இந்தப் பெட்டிக்குண்டு. எல்லாப்பெரிய விமானங்களிலும் இந்த பெட்டிகட்டாயம்அமைந்திருக்கவேண்டும். இதனோடு FDR/Flight Data Recorder)

24 நாட்களுக்குப் பின்னர் கடலிலிருந்து மீட்கப்பட்ட போதும். ஒலிநாடா மிகத் தெளிவாக இருந்தது! விமானத்தின் நான்கு என்ஜின்களில் ஏதேனும் ஒன்று இயக்கத்தில் இருந்தால் கூட இந்தப் பெட்டி செயல்பாட்டில் இருக்கும் ஆக விபத்து நடக்கும் கடைசி நொடி வரை இப் பெட்டி இயங்கும்.

இந்தக்கறுப்புப் பெட்டியின் நிறம் ஒறேஞ் (Orange) அல்லது சிவப்பு ( Red ) ஆக இருக்கமே தவிர கறுப்பாக இருக்கமாட்டாது.

பத்து கிலோ வரை எடை இருக்கும். இந்தப் பெட்டியில் ஒலிப்பதிவு மற்றும் அதனைக் கட்டுப்படுத்தும் கருவியும்

யுள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி சென்ற பொதுத் தேர்தலின் போது அமோக வெற்றியை பெற்றுக் கொள்ளாத நிலையில் சிறுபான்மை அரசாங்கத்தை அமைத்தது தெரிந்ததே. இச் சிறுபான்மை அரசாங்கத்துடன் இணைந்த பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தவர்களுக்கும் விரும்பியோ, விரும்பாமலோ அமைச்சு பதவி மற்றும் முக்கிய பதவிகள் வழங்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான கட்சியான சுதந்திரக்கட்சி தள்ளப்பட்டுவிட்டது.

## நெருக்கடியில் பொ.ஐ.மு

இதன் பிரகாரம் பொதுஜன ஐக்கிய முன்னணியில் கூட்டுச் சேர்ந்த கட்சிகளின் தலைவர்களும் அமைச்சர் பதவியில் அமர்த்தப்பட வேண்டிய நிலைஏற்பட்டது. இத்தகையதான நிலை கட்சிக்கு உள்ளே சிறு சிறு சலனங்களையும், சபலங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இதனால் திருமதி சந்திரிகா தலைமைத்துவத்திற்கு எதிரான முணுமுணுப்புக்கள் அவரது கட்சிக்குள்ளிருந்தும் கிளம்ப ஆரம்பித்துள்ளது.

தென்மாகாண சபையில் இருந்து ஆறு மாகாணசபை உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் சார்பில்தெரிவு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ் வெற்றிடத்தை நிரப்ப பொதுஜன ஐக்கிய முன்னணி எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்து பொதுஜன ஐக்கிய முன்னணியில் அம்பாந்தோட்டை ஆதரவாளர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் அவ் முன்னணி நியமனத்திற்கு எதிராக உண்ணாவிரதம் இருந்தமை இதற்கான சிறந்த உதாரணமாகும்.

நிலையைத் தீர்த்து வைக்கும் முகமாக நடைபெற்றது எனலாம்.



திருமதி சந்திரிகாவின் அமைச்சரவையில் இடம் பெற்றிருக்கும் முக்கிய அமைச்சர்கள் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களாகவே உள்ளனர்- மற்றும் சிலர் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்கள். இதனால் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சுதந்திரக் கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டவர்கள் மத்தியில் பெரிய கவலை தோன்றியிருக்கின்றமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜனாதிபதி தேர்தலானது பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் அதன் தலைமைக்கும் இலகுவான வெற்றியைக் கட்டியம் கூறுவதாக கருதமுடியாது எனினும் இத்தகைய அதிருப்தியாளரின் செல்வாக்கு இப்போதைக்கு மேலோங்குவது பெரும் கடினமாக இருக்கிறது என்பதையும் மறுப்பதற்கு இல்லை. இதனால் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றியை சுவீகரித்துக் கொண்டாலும்அது திருப்திப்படக் கூடியதாக இருக்

இங்கு முன்னணிக்கு கிடைக்க இருக்கும் வாக்குகளை சிதைக்கச் செய்வதில் ஐக்கிய தேசியக் கட்சி மிகவும் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது.

அதாவது ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகள் எண்ணப்படும் போது முதலாவது சுற்றில் எவரும் தெரிவு செய்யப்படாத ஒரு நிலையை தோற்றுவித்துவிட்டு, இரண்டாவது விருப்பத் தெரிவை எண்ண வைப்பதன் மூலம் தனது கட்சி வேட்பாளரை ஒரு குறுக்கு வழியில் ஜனாதிபதியாக்கி விடலாம் என ஐ.தே க. எண்ணுகிறது.

இதற்கான ஓர் திட்டமாக ஜே. வி. பி. யின் தலைவரான மறைந்த றோகண விஜேவீராவின் மைத்துனர் டாக்டர் சந்திரா பெர்னாண்டோ லண்டனில் இருந்து திடீரென வரவழைக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதி டி.பி விஜேதுங்காவுடன் அவர் ஜனாதிபதி மாளிகையில் விஷேட சந்திப்பும் நடத்தப்பட்டுள்ளது. றோகண விஜேவீராவின் குடும்பத்தினரை விடுதலை செய்வது, ஜே. வி. பி யிடமிருந்து சுவீகரிக்கப்பட்ட 58 கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களை மீள அளிப்பது போன்ற டாக்டர் சந்திரா பெர்ணாண்டோவின் கோரிக்கைகள் ஜனாதிபதியினால் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ள

> சந்திரிகா - காமினி இருவருமே தாம் எத் தேர்தலிலும் தோல்வி கண்டதில்லை என பெருமையாகக் கூறிவருகின்றனர். ஆனால் இவர்களில் யாரோ ஒருவர் இம்முறை தோல்வியை தழுவுவது தவிர்க்க முடியாதது.

ததும் ஐ, தே, க. விற்கு இங்கு கணிசமான எதிர்ப்பு இருப்பதும் கவனத்திற்குரியது.

மேலும்கம்பஹா மாவட்டத்தில் வாழும் செல்வாக்கு உள்ளவர்களை தன்வசம் இழுத்து சுயேட்சையாக தேர்தலில் நிறுத்த ஐ தே.க, பெரும் முயற்சி எடுத்து வருகின்றது.

## ஐ. தே. க. நிலையும் மோசம்

இவை ஒருபுறமிருக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நிலையும் மேலும் மோசமடைந்து வருகின்றது. அது தொடர்ந்தும் பலவீனமான நிலையை நோக்கியே பயணம் செய்வதாகவும் கூறப்படுகின்றது. தற்போது இக் கட்சியின் தலைமையைப் பொறுப்பேற்றிருக்கும் காமினி திசாநாயக்கா, ஒரு காலத்தில் கட்சிக்கு எதிராகச் செயற்பட்டவர். கட்சியை விட்டு வெளியேறியவர். எனவே நீண்டகாலமாகக் கட்சியில் இருப்பவர்கள் பலர், காமினி தலைமைப் பதவி வகிப்பதை விரும்பவில்லை. அதிலும் குறிப்பாக ரணில் விக்கிரமசிங்கவிடம் எதிர்க்கட்சித்தலைவர் பதவி போய்விடாமல் காமினி திசாநாயக்கா தட்டிப் பறிக்கப்பட்டமை பலரையும் கலவரமடைய செய்துள்ளது. இத்தகையவர்களுக்கு எதிராக இப்போது நடவடிக்கைகள் எடுக்கப் படுகிறது. அதில் குறிப்பாக முன்னாள் தகவல் அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்கா, முன்னாள் பொது செயலாளர் சிறிசேன கூரே போன்றவர்களை கட்சியிலிருந்து வெளியேற்ற காமினி

கட்சியில் தனது முழுமையான ஆதரவாளர்களை மட்டும் வைத்திருப்பதையே காமினி



விரும்புகின்றார். எனவும் விமர்சகர்கள் கருதுகின்றார்கள்.

மேலும் ஜனாதிபதி டி. பி, விஜேதுங்கா, தான் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எந்தவொரு பிரசார மேடையிலும் ஏறப் போவதில்லையென தெளிவாக தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது இவ்வாறான ஒரு இழுபறி நிலையில் காமினி தேர்தலை சந்திப்பது என்பது மிகவும்ஒரு சங்கடமான நிலையேயாகும் காமினிக்கு ஜனாதிபதித் தேர்தலில்தான் தோல்வியடைய இருப்பது பற்றி தெரி

**நிமலராஜன்**

யும். எனினும் அவரது முழுமையான முயற்சியும் ஐ.தே.க வின்தலைமைப் பதவிக்கேயாகும். அதன் மூலம் எதிர்காலத்தில்ஐ தே.க ஆட்சிஅமைக்கும் பட்சத்தில் அடுத்த பிரதமர் அல்லது ஜனாதிபதியாகும் இலக்குடனே அவர் இருக்கின்றார்.

இதேவேளை அரசியல் அமைப்பை மாற்றி ஜனாதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

FDR[Flight Data Recorder) எனப்படும் விமானத்தின் இதர அம்சங்களான விமானம் பறக்கும் உயரம், வேகம், உந்துவிசை, விமானம் மீது செயல்படும் ஈர்ப்பு விசை போன்றனவற்றைப் பதிவு செய்யும் கருவியும் உண்டு. விபத்திற்கு 30 நிமிடங்கள் முன் விமானத்தில் நடைபெற்ற உரையாடல்கள் மற்றும் பிற விபரங்களை கறுப்புப் பெட்டியும் FDR ம் பதிவு செய்யும்.

இந்தக் கறுப்புப் பெட்டியில் நான்கு ஒலித்தடங்கள் உண்டு முதல் ஒலித்தடம் (Channel) விமானப் பொறியியலாளரிடமிருந்தும், விமானிகள் அறையிலிருந்தும் விபரங்களைப் பதிவு செய்யும் மேலும், விமானப் பணிப்பெண்கள் செய்யும் அறிவிப்புக்களையும் பதிவு செய்யும் இரண்டாவது ஒலித்தடத்தின்பணி துணை விமானிகளிடமிருந்து விபரங்களை சேகரிப்பதாகும், மூன்றாவது ஒலித்தடம் தலைமை விமானியிடமிருந்து விபரங்களைச் சேகரிப்பதாகும்.

நான்காவது ஒலித்தடம் மிகமுக்கியமான ஒன்று அது விமானிகள் அறையில் எழும் சப்தங்கள் ஆளி [ஸ்விட்சு] களிலிருந்து வரும் ஒலி, என்ஜீன் இரைச்சல் மற்றும் பிற வெளிச் சத்தங்களைப்பதிவு செய்யும்.

### அமைவிடம்

விமானம் விபத்திற்குள்ளாகும் போது அதிகம் பாதிக்கப்படாத வகையில் கறுப்புப் பெட்டி பொருத்தப்படும் இடம் தேர்ந்தெடுக்கப்படுகிறது விமானத்தின் பின்பகுதியே இதற்குச் சரியான அமைவிடம் இந்தப் பெட்டி கடும் மழை, வெப்பம் ஆகியவற்றால் கூடபாதிக்கப் படுவதில்லை.

ஏர் இந்தியா, போயிங் 747 விமானம் ஒன்று பம்பாய் அருகில் விபத்துக்குள்ளாகி கடலில் விழுந்தது அந்த விமானத்தின்கறுப்புப் பெட்டி

கட்டுப்படுத்தும் கருவியும் உண்டு விபத்து நடந்த வினாடியிலிருந்து முதல் 30 நிமிடங்கள் தான் சேகரித்த விபரங்களைத் தவிர பிறவற்றைத் தானே அழித்துவிடும் அமைப்பு இதில் உண்டு

ஒலிப்பதிவில் கால் அங்குல (0.6 செ மீ) அகல ஒலிப்பதிவு நாடா பயன்படுத்தப் படுகிறது கறுப்புப்பெட்டி நீரில் மூழ்கியவுடன் ஒரு சுவிச்சானது இயக்கம்பெற்று சிக்னல் ஒலிகளை எல்லாத்திசைகளிலும் பரப்பும் இதனை டிடெக்டர்கள் மூலம் அறிந்து பெட்டியினைமீட்கலாம இந்த ஒலி தொடர்ந்து 30 நாட்கள் எழுப்பப்படும்.

முன்பெல்லாம்விபத்துக்குள்ளான விமான இடிபாடுகளை ஆராய்ந்துதான், விபத்திற்கான காரணங்களைக் கண்டறிவார்கள் ஆனால் தற்போதைய அதிநவீன மிகவேகமான விமானங்களில் அந்த முறையில் காரணம் அறிவது சாத்தியமில்லை. தற்போது கறுப்புப்பெட்டி மிக அத்தியாவசியமாகி உள்ளது.

கறுப்புப் பெட்டியின் விமானிகள் அறை ஒலிப்பதிவு நாடாவில் இருந்து விபரங்களைச் சேகரிப்பது மிக கடினமான பணியாகும் விமானத்தின் இரைச்சல் அழைப்பு மணியின் ஓசை மற்றும் விபத்தின் போது பயணிகளின் அலறல் இவைகளின் மத்தியில் விமானப் பெட்டியின் பேச்சுக்களை பிரித்துப் பார்த்து விபரங்களைச் சேகரிக்க வேண்டும்

ஆனால் இந்தப்பெட்டி சேகரிக்கும் விபரங்களைமட்டுமே கொண்டு விபத்திற்கான காரணம் முடிவு கட்டப்படுவது இல்லை விமான இடிபாடுகளை நன்றாக பார்வையிட்ட பின்தான் ஒருமுடிவுக்கு வர இயலும் கறுப்புப்பெட்டியின் நான்கு ஒலித்தடங்களும் தனித்தனியாகப் பிரித்து ஆராயப்படும் விபத்திற்குள்ளான விமானியின் குரல் பரிச்சயமானவர்கள் மூலம் கண்டறி

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யப்பானின்

இலட்சம் மக்கட்கு மேல் கொன்று குவித்தமை எந்த வகையிலும் நியாயப்படுத்தப் பட முடியாததாக இவர்கள் கருதுகின்றனர். ஏனென்றால் அணுக்குண்டுகள் வீசப்பட முன்னரே யப்பான் சரணடைவது குறித்துமுடிவெடுத்ததாக கூறப்படுகின்றது. இத்தகவல்அமெரிக்கசனாதிபதி கரிட்ரூமனுக்கு முற்கூட்டியே தெரிந்திருந்தும் அவர் அணுக்குண்டைவீசினார் என யப்பானியர் நம்புவது உண்மையே என்று இப்போதைய ஆய்வுகள் தெளிவிப்பதாக கூறப்படுகின்றது. இறுதியாக வெளியிடப்பட்ட தகவல்களின் படி (1945 நவம்பருக்கு முன் யப்பான் சரணடைய தீர்மானித்திருந்ததாகவும் இவ் இரகசியச் செய்தி ட்ரூமனுக்கு ஆகஸ்ட் மாதத் தொடக்கத்திலே தெரியும் என்று கூறப்படுகின்றது. முக்கியமான 2-ம் உலகப் போர்க் காலகட்ட ஆவணங்களை ஆராய்ந்தோர் திடுக்கிடும் இத்தகவலை வெளியிட்டுள்ளனர். சோவியத் ருஷ்யா யப்பான் மேல் படையெடுக்க இக்கால கட்டத்தில் தீர்மானித்ததால் அதற்கு முன்தான் தலையிட்டு தனதுசெல்வாக்குவட்டத்துள் யப்பானைக் கொண்டுவரவே அணுக்குண்டு வீசப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. முதல் குண்டு கிரோசிமாவில் வீசப்பட்ட போது அது ஒரு இராணுவத்தளம் என அமெரிக்க சனாதிபதி பொய் கூறியதும் தெரிய வந்துள்ளது. அதுமட்டுமன்றிபுளூட்டோனியம் யுரேனியம் என இருதன்மையிலான அணுக்குண்டுகளையும் பரீட்சித்துப் பார்ப்பதற்காகவே 9ஆம் திகதி அடுத்த குண்டும் போடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்அதிர்ச்சியூட்டும் தகவல் அமெரிக்காவின் நயவஞ்சகப் போக்கினைக் குறிக்கும் அதே சமயம் யப்பானியரே தமது கொடுமைகளை மறைக்க பயன்படுத்தும் முகமூடியாகியும் விட்டது.

### கொடுத்தவனே எடுக்கும் விந்தை:

இவ்வாறாக பழைய வரலாறுகள் கிளறப்பட அதிர்ச்சியூட்டும் தகவல்கள் வெளிவந்தவாறேயிருக்கின்றன. இவை எவ்வாறு இருந்தாலும் யப்பானை பொறுத்தவரை தனது பாவங்களைக் கழுவமட்டும் தனது வெளிநாட்டு உதவித் திட்டத்தை பயன்படுத்தவில்லையென்பது வெளிப்படை. அண்மையில் வெளியான பாரிய ஊழல் விவகாரங்கள் அம்பலப்பட்ட நிலையில் யப்பானின் வெளிவிவகார அமைச்சின் வெளிநாட்டு நிதி உதவித்திட்டங்கள் ஈற்றில் எவ்வாறு யப்பானின் வணிக நிறுவனங்களிடமே செயற்படுத்தப் படுவதற்காக சென்றடையத்தக்க வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும், இதற்காக பெருமளவு கையூட்டுக்கள் யப்பானிய வெளி விவகார அமைச்சில் தொடங்கி உதவி பெறும் நாடுகளின் அரசியல் பீட உயர் மட்டங்கள் வரை வழங்கப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அத்தோடு யப்பானின் ODA எனப்படும் வெளிநாட்டு உதவித் திட்டங்கள் பெரும்பாலும் உட்கட்டுமானப் பணிகள் தொடர்பிலே அமைவதும் யப்பானிலே ஆகக்கூடிய உட்கட்டுமானப்பணியினருக்கும்வணிகநிறுவனங்கள்இருப்பதும் குறிப்பிடத்தக்கது மிட்சுபிசி போன்ற பாரிய நிறுவனங்கள் உட்பட 37 யப்பானிய வணிக நிறுவனங்கள் இத்தகைய கையூட்டுக்கள் வழங்கி பயன் பெற்றமை இப்போது தெரிய வந்துள்ளது. யப்பானின் பொருண்மிய வளர்ச்சி என்பது அங்கீகரிக்கப்பட்ட முறைமையொன்றாகவே மாறிவிட்ட இத்தகைய பாரிய ஊழல்களிலும் இரகசிய வன்முறை உலகக்குழுக்களிலும் தங்கியுள்ளது என்பது எம்மில் பலருக்கு தெரியாத செய்தி.

எனவே பணத்தால் பாவங்கள் கழுவப்படுவதும், நிதி உதவி மூலமே ஈற்றில்தானே பயன்பெறுவதுமாக ஒரு கல்லில் பல மாங்காய்கள் வீழ்த்தும் தந்திரமும் யப்பானியருடையது. எனவே கொடுத்தவனே எடுத்துக்கொண்டான் என்கிற நிலையில் உலகமே வியக்கும் யப்பானின் வளர்ச்சியின்பிரதான மருமம் புலனாகின்றது.

## யேசுராசா

விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான கண்ணோட்டத்தைத் தான் வைத்திருந்தவர்கள். நாங்கள் ஒரு தேசிய இனம் என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்ளாதவர்கள், இதே போல வளர்ந்துவரும் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும் இவர்கள் ஆதரவாக இருந்ததில்லை.

செ- யோகநாதன் ஒரு காலத்தில் சிங்களக் கட்சியுடன் இணைந்திருந்தவர்.

இவர்கள் 83க்குப் பின்னர் தனிப்பட்ட காரணங்களுக்காக தமிழ் நாட்டிற்கு சென்ற பிறகு தாம் போராட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் போல கருத்துக்களை கூறிக்கொண்டு பல்வேறு விதமான படைப்புகளை தந்து கொண்டிருக்கிறார்கள் பெரும்பாலான படைப்புகள் செயற்கையானவையாகத்தான் தென்படுகின்றன இவர்கள் நம் தேசத்தில் இருக்கும் போது தமிழர்களுக்கிருக்கும் ஒரேயொரு பிரச்சினை தரப்படுத்தல் மட்டுமே எனச் சொல்லி வந்தனர்-

எந்தவிதமான அனுபவங்களுக்கும் உட்படாமல் ஒரு சத்திய ஆவேசத்திற்கு உட்படாமல் 83 க்குப் பின்னர் ஏற்பட்ட நெருக்கடிகளை - பிரச்சினைகளை ஒரு தூரத்து பார்வையாளராக இருந்து இலக்கியம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி; ஈழத்து படைப்பாளிகளின் படைப்புகள் சமீபத்தில் தமிழ்நாட்டு சஞ்சிகைகளில் அதிகளவில் பிரசுரமாகி வருகின்றமை பற்றி?

பதில்; வெளிவரும் படைப்புகள் யாவும் இந்த மண்ணின் யதார்த்த நிலையைச் சொல்லவில்லை. கணையாழியில் வெளிவந்துள்ள செங்கை ஆழியானின் 'யாழ்ப்பாண கிராமம் ஒன்று' என்ற குறுநாவல் உண்மையில் திரிக்கப்பட்ட படைப்பு ஆசிரியர் கூற்றாக ஒன்று சொல்கிறார்; ''சலித்துக்கொள்ளாமல் என்ன செய்யமுடியும்? முடிவுகாணாமல் தொடரும் யுத்தம் எல்லாரையும் சலிக்கச் செய்து வருகின்றது எதற்கும் ஒரு முடிவு தேவை' என்று சொல்வதன் மூலம் இவர் வெறும் சுயரூபத்தைத் தான் முன்வைக்கின்றார்.

எத்தகைய அமைதி தேவை? ஒரு கௌரவம், நீதியுடன் கூடிய அமைதி தேவை அதற்கு நாங்கள் எந்தவிலை கொடுக்கலாம், அதற்குரிய ஒரு நெருக்கு வாரத்தை எதிரிக்கு கொடுப்பதன் மூலம் நாம் எமக்குரிய சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பெறவேண்டும் என்பது

இலக்கியத்திலும், நாடகத்திலும், திரைப்படங்களிலும் - இவற்றில் மிக முக்கியமானதாகச் சொல்லக்கூடிய விஷயம் இந்த வீடியோ திரைப்படத்தைப் பற்றித்தான். குறிப்பாக குறும் படங்களை எடுத்துக் கொண்டால் அரசியல் சார்ந்து மிக நல்ல குறும்படங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அண்மைக் காலத்திலும் ஆறுகுறும்படங்களைக் கொண்ட ஒருகெஸட் வெளிவந்துள்ளது. அதில் இடம்பெற்ற 'நேற்று' என்ற படம் மிக உயர்தரமான படம் வேறு ஒரு சில படங்களும் இருக்கின்றன. இவை போராட்டகால கட்டத்தில் காலரீதியான - ஒரு வெற்றிகரமான பங்களிப்பு.

இதேபோல நீண்ட வீடியோ திரைப்படங்கள் பல உருவாக்கப்பட்டுள்ளன இவற்றில் 'காற்றுவெளி' மிக உயர்தரமானது அது போராளிகளுக்கும் பொதுமக்களுக்குமிடையே இருக்கக்கூடிய தொடர்பு -உறவு பற்றி பேசுகின்றது. நவீன திரைப்பட மொழியை அது மிக நன்றாகக் கையாண்டுள்ளது

இதேபோல் தமிழோசை, தாயகக்கனவு போன்ற படங்கள் மிக முக்கியமானவை- குறிப்பாக,கமரா கையாளப்படுவது தேர்ச்சியான முறையில் இருப்பதை நாம் அவதானிக்கலாம்- இக்கலை முயற்சியுடன் சம்பந்தப்பட்டவர்கள் பெரிதும் பாராட்டுதலுக்குரியவர்கள்-

கேள்வி; உங்கள் படைப்பு முயற்சிகள் பற்றி சொல்லுங்கள்?

பதில்: நான் பெரிய எண்ணிக்க்கையில் எழுதியவனல்லன்! அதற்கு பிரதான காரணம் என்னவென்றால்,படைப்பு உந்தல் இருக்கும் பட்சத்தில் மட்டும் படைப்பில் ஈடுபட வேண்டும் என்பதுதான் என்னுடைய அடிப்படையான நோக்கம்- படைப்பு உந்தல் இருந்த காலத்தில் என்னால் நிறைய எழுத முடிந்தது- அவ்வாறு எழுதின சிறுகதைகள், கவிதைகளைக் குறிப்பிடலாம்-

சமீப காலத்தில் விமர்சனக் கட்டுரைகள் நிறைய எழுதியுள்ளேன்- அலை, திசைகளில் ஒவ்வொரு பகுதிகளில் விமர்சனம் எழுதியுள்ளேன்- இவற்றை விட திரைப்படம்,நாடகம் தொடர்பாகவும்பல்வேறு விதமான கட்டுரைகள் எழுதியுள்ளேன்-

சமீபகாலத்தில் நான் படைப்பு முயற்சிகளில் ஈடுபடவில்லை என்பதற்கு ஒரு காரணம், என்னுடைய நாட்டம் அறிவு சார்ந்த விஷயங்களில் தான் உள்ளது-படைப்புந்தல் ஏற்படும் போது படைப்பேன்

கேள்வி: பொதுவாக ஈழத்து


## யாழ்ப்பாண மாநகரசபை

## முக்கிய அறிவித்தல்

### யாழ். மாநகரசபை எல்லைக்குள் புதிய கட்டிடங்கள், திருத்த வேலைகள், மற்றும் விஸ்தரிப்பு வேலைகள்

எமது நகரப் பகுதியில் புதிய கட்டிடங்கள் அமைத்தல், கட்டிட திருத்தம், மற்றும் விஸ்தரிப்பு வேலைகள் ஆகிய சகலவற்றிற்குமான அங்கீகாரத்தை மாநகர சபையிடம் பெற்றுச் செயற்படுமாறு பொதுமக்கள் இத்தால்கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள் இச்செயற்பாடுகள் சட்டதிட்டங்களுக்கமைவான முறையிலும், நகரத்தின் எதிர்கால வளர்ச்சித் தேவைகட்குக் குந்தகம் விளைவிக்காத வகையிலும் அமைவதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு எம் மக்களுக்கும். இச்சபைக்கும் உண்டு.

கட்டிடப் பொருட்கள் ஓரளவிற்குக் கிடைக்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளமையினால், சபையின் அங்கீகாரமின்றி சில கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படுவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவை தொடர்பாக கண்டிப்பான நடைமுறையை நாம் செயற்படுத்த வேண்டியவர்களாகவுள்ளோம். அவ்வாறான அங்கீகாரம் பெறப்படாத வேலைகள் இடைநிறுத்தப் பட்டுள்ளன.

ஆகவே, புதிய கட்டிடங்கள் அமைத்தல், கட்டிடத்திருத்தம் மற்றும் விஸ்தரிப்பு போன்றவற்றைச் செயற்படுத்த விரும்புபவர்கள் நல்லூர்இந்து பிடுதியில் அமைந்துள்ள சபையின் திட்டமிடல் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களுக்கான அங்கீகாரத்தினை ஏழு நாட்களுக்குள் வழங்கத்தக்கவகையில் குறித்த பிரிவு செயற்பட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும் அறியத் தருவதுடன், அங்கீகாரம் பெறாமல் கட்டிட நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதால், ஏற்படக்கூடிய அசௌகரியங்களைத் தவிர்த்து எம்முடன் ஒத்துழைக்குமாறு விநயமுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-10422)


## இணையும்

முடிந்ததும் யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டு விட்டாள்.

வருடங்கள் நான்கு நகர்ந்து விட்டன. இன்னமும் வசந்தி தன் நிலையிலிருந்து விலகவில்லை,

இன்று வசந்தி தன் கடமையுடன் ஒன்றிவிட்ட ஒருடாக்டர் புனிதத்தன்மையுடன்செயற்படும் அவள் காலநேரம்பார்க்காத ஒரு சேவகியாக விளங்குகிறாள். நோயாளர் அவளை அம்மா! என்று அழைக்கும் போது தாயாகவே மாறி அவர்களை அன்பினால் அரவணைப்பாள் விழுப்புண் அடைந்துவரும் நோயாளரைச் சிகிச்சையினால் மட்டுமல்ல அன்பினாலும் அவர்களைப் பராமரித்துமனநிறைவெய்துவாள்

★ ★ ★

வசந்தியின விரக்தியில் நியாயமிருப்பதை நாதன் உணர்ந்து கொண்டான்.

''டொக்டர் என்னுடைய பிடிவாதத்திலை ஏதும் பிழையிருக்கிறதாய் நான் நினைக்கேல்லை. யாராவது என்னையே மட்டும் விரும்பி என்னை மணக்க முன்வந்தால் நான் அதை மறுக்கப் போறதில்லை. தவிர, பணத்திற்காகவே பேரம் பேசி என்னைக் கடிமணம் புரிய வருபவர்களை நான் மணக்கத் தயாராயில்லை இந்தப்புனித பணியே எனது இலட்சியமாக வாழ்ந்துவிட்டுப் போகிறேன்''

''வசந்தி! உமது இலட்சியமும் பிடிவாதமும் நியாயமானதென நான் ஒத்துக்கொள்கிறேன் ஆனால்...... என்னையறியாமலே எனது மனம் உம்மை ஆழமாக நேசிக்கத் தொடங்கி விட்டதை என்னால் உணர முடிகிறது நீர் சம்மதித்தால் நாமிருவருமே இந்தப் புனித பணியை இலட்சியமாக ஏற்று வாழலாம். என்ன சொல்கிறீர்?''

நாதனின் உணர்ச்சிபூர்வமான வார்த்தைகளைக் கேட்டு, வசந்தி திடுக்கிட்டுப் போனாள் சற்றும் எதிர்பார்த்திராத இந்தக் கேள்வி, அவளது வதனத்தை நிலம் நோக்க வைத்தது.


நீண்ட நேரம் நிலவிய மௌனத்தை நாதனே கலைத்தான் ''வசந்தி! பிளீஸ்


## கேட்டு வாங்குங்கள்

### மணலாறு கச்சான் அலுவா

தரம், சுவை, சுத்தம் நிறைந்தது. எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம். இப்போது விசேட


## 7-ம் ஆண்டுநினைவலைகள்



மலர்வு:-
20-7-1947

உதிர்வு:-
16-10-1987

அமரர் கந்தசாமி சண்முகநாதன்

(பேபி) திதி - 30-9-19

தரம், சுவை, சுத்தம் நிறைந்தது. எல்லா வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம். இப்போது விசேட பரிசுத்திட்டத்துடன் விற்பனையாகிக் கொண்டிருக்கிறது.

பாரதி சிறுகைத்தொழில் நிலையம்
சம்பியன் லேன்,
கொக்குவில்.

(9505)

## மாட்டு வண்டி சவாரிப் போட்டி

இடம்:- ஆவரங்கால் சவாரித்திடல்
காலம்:- 02 - 10 - 1994

ஞாயிற்றுக்கிழமை பி. ப. 2.00 மணி

★ கைக்கொடிச் சவாரியும் இடம் பெறும்
★ பிரவேசம் இலவசம்

ஆவரங்கால் விவசாயிகள்

(9551)

நீண்ட நேரம் நிலவிய மௌனத்தை நாதனே கலைத்தான் ''வசந்தி! பிளீஸ் டேக் யுவர் ஓன் டைம். ஆறுதலாய் யோசிச்சு ஒரு நல்ல முடிவுக்கு வாரும்.

நாதனின் அந்த வார்த்தைகள் இப்போதும் வசந்தியின் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. நான்கு நாட்களாக அவளை ஆட்டி, அலைக்கழித்த மனக்குரங்கை ஒரு படியாக நிலைக்குக் கொண்டு வந்து விட்டாள்.

தீர்க்கமான ஒரு முடிவை எடுத்துக் கொண்டாள்.

அவளது கை பெற்றோருக்குச் சந்தோஷமான செய்தி ஒன்றை எழுதிக் கொண்டிருந்தது.

அவளது வாழ்வு மலருவதற்குத் தடைக்கல்லாக இருந்த அவளது இலட்சியத்தை நிறைவேற்ற நாதன் முன்வந்திருப்பதை நிச்சயமாக அவர்கள் வரவேற்பார்கள் என்ற நம்பிக்கையுடன் எழுதிக்கொண்டிருந்தாள்.

நாம் எமக்குரிய சுதந்திரத்தையும் கௌரவத்தையும் பெறவேண்டும் என்பது போன்ற சரியான பாதையுடனான கருத்துக்களை அவர் அக்கதையில் வைக்கவில்லை. மொத்தத்தில் பிரபலமான சஞ்சிகைகள் - அல்லது பதிப்பகங்கள் ஊடாக தமது படைப்புகள் வெளி வருகின்றமையை. இவர்களைப் போன்றோர் ஒரு புகழாகவே கருதுகின்றனர்.

கேள்வி: ஈழத்தில் தயாரிக்கப்படுகின்ற குறும்படங்கள் திரைப்படங்கள் பற்றியும் அதன் சிறப்புப்பற்றியும் சொல்லுங்கள்?

பதில்: இந்தப் போராட்ட காலத்தில் வட தமிழீழத்தில் எல்லாமே வரண்டு விட்டது. இங்கு ஒன்றுமே இல்லை என்றவிதமான பொய்த்தோற்றத்தினை இந்தப் புலம்பெயர்ந்த எழுத்தாளர் பலர், வெளியிட்டு வருகின்றனர்.

இதற்கு மாறான பல இங்கு நடைபெறுகின்றன.

தான் உள்ளது- படைப்புத்தல் ஏற்படும் போது படைப்பேன்

கேள்வி: பொதுவாக ஈழத்து கலை இலக்கிய அமைப்புக்கள் பற்றி விமர்சன ரீதியான உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்?

பதில்: எழுத்தாளர் ஒன்றியம் போன்ற அமைப்புக்கள் இருக்கின்றன- இந்த ஒன்றியம் பல்வேறு விதமான கண்ணோட்டம் உடையவர்களை இணைத்து முக்கியமாக தெளிவான ஒரு அரசியல் நிலைப்பாட்டுடன் ஒடுக்கு முறைக்கு எதிரானகலைஞர்களின் ஒட்டு மொத்தக்குரலை வெளிப்படுத்துவதான பணியினையாற்ற வேண்டும்-

இதில் இணைந்துள்ளவர்கள் இலக்கியத்தை பரவல் படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும். இது ஏற்றுக் கொள்ளப்பட்டு பொறுப்பான திட்டங்கள் வரையறுத்து செயற்படுவதான போக்கு இல்லை- இது ஒரு பாரிய குறைபாடாகத்தான் உள்ளது-

தடா

ளிட்ட 11 வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்களிலிருந்து பெறப்பட்ட பெருந்தொகையான பலவந்த வாக்குமூலங்கள் நிராகரிக்கப்படும் வாய்ப்புள்ளது. இப்புதிய விதி, தடாவின் முக்கிய பிடிகளில் ஒன்றை வலுவிழக்கச் செய்தாலும், தடா தன் ஏனைய அதிகாரங்களை இழக்காத பட்சத்தில், இது பலனளிக்குமா என்பதும் கேள்விக்குறியே,

தடா நீடிக்கப்படுமா அல்லது நீடிக்கும் பட்சத்தில் இதுபோல் அதன் பிடிகள் தளர்த்தப்படுமா என்பது இன்னும் தெளிவாகவில்லை- இந்நிலையில் தடா எழுப்பியுள்ள வாதப் பிரதிவாதங்கள் இன்னும் அதன் சுயரூபத்தை வெட்ட வெளிச்சமாக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அமரர் கந்தசாமி சண்முகநாதன்
(பேபி) திதி - 30-9-1994

அன்பைச் சொரிந்த அத்தானே
நீங்கள் மறைந்து ஆண்டு ஏழு ஆனாலும்
எம் இதயத்தில் இருந்து நீங்கள் மறையவில்லை.

இராமலிங்கம் றோட்,
திருநெல்வேலி. - இந்திரா குடும்பத்தினர்.

(9542)

## அந்தியேட்டி அழைப்பு



தாயின் மடியில்
13-11-1944
தரணியின் அடியில்
01 09-1994

ஆதிநாராயணசாமி
ஜெயச்சந்திரன்
(கலிங்)

கல்வியதை நாம்கற்று கரையதனை சேருமுன்னம்
சொல்லியழ வைத்திட்டாய் துயரதனை தந்திட்டாய்
மல்யுத்த வீரனைப்போல் மதயானைக் கொத்தநடை
ஷெல்கொண்டு தாக்கிடினும் செயலிழந்து நின்றிடாத
- உனை
புல்லுருவி போல் வந்த பொய்க்காய்ச்சல் ஒன்றதனால்
எல்லாமே அழிந்ததப்பா இனிநாங்கள் என்ன
செய்வோம்.

நாளை 01-10-1994 சனிக்கிழமை அன்று எமதில்லத்தில் நடைபெறவிருக்கும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நாவல்க்கண்டு, மனைவி, மக்கள்,
பருத்தித்துறை வீதி, குடும்பத்தினர்.
வல்வெட்டித்துறை. [9552]

## போட்டோ அல்பம் இனாம்

- கலர் பிலிம் சுருள்களை கழுவி படமாக்கி 30 பிரதிகள் பெற்றால் ஒரு போட்டோ அல்பம் இனாம்.
- கொம்பூட்டர் றபர் சீல் (COMPUTER RUBBER STAMPS) (இரண்டு வருட உத்தரவாதம்)
- லயின், காவ்ரோன், கலர் புளொக்ஸ் (Line, Half Tone, Colour Blocks)
- புகைப்பட பிரதியாக்கம் [RE-COPY] மேல் குறிப்பிட்டவற்றைக் குறைந்த செலவில் குறுகிய காலத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

★ கொழும்பு கலைக்கூடம் ★

[கொழும்பு ஸ்ரூடியோ]

55. லெப். இளங்கோ வீதி, யாழ்ப்பாணம்.

தொழில்நுட்பத்தில் 35 வருடங்கள் அனுபவம் பெற்றவர்கள்

(சி-10219)

## தேவை

கலர் தொலைக்காட்சி பெட்டிகள் வீடியோ டெக் வகைகள் சகலவிதமான ரேப் செற் வகைகள் நல்ல விலை கொடுத்து கொள்வனவு செய்யப்படும்.

தொடர்புகளுக்கு:

மின்வளம்

இல 81, சந்தோசத்தெரு, யாழ்ப்பாணம்
(கஸ்தூரியார் வீதி)

(சி-10424)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தையும் பிரதமர் சந்திரிகா முன்னுள்ள பிரச்சினைகளும்

சுமார் 50 மாதங்களைக் கடந்து இரண்டாம் கட்ட ஈழப்போர் நிகழ்ந்து கொண்டிருக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான நேரடிப் பேச்சுவார்த்தைகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. சிறப்பாகக் கூறுவதானால் ஒரு கட்சியின் ஆட்சி மாற்றத்தின் பின் இப்பேச்சுவார்த்தை தொடங்குகின்றதெனலாம்.

கடந்த நான்கு வருடத்தில் ஏற்பட்ட பெரும் மோதல்கள், இழப்புக்கள் என்பனவற்றின் பின்னர் ஆரம்பமாகவுள்ள இப்பேச்சுவார்த்தைகள் எத்துணை நம்பகரமானவை? அவற்றின் முன்னேற்றம் எதுவரையில் செல்லும்? இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்று ஏற்படுமா? அவ்வாறு சாத்தியப்படுமானால் எவ்வளவு காலத்திற்குள் அது சாத்தியமாகும்? என்பது போன்ற கேள்விகள் இன்று பரவலாக எழுப்பப்படுகின்றன. இது அரசியல் விமர்சகர்கள் மத்தியிலும் பலமான வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளன.

விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெறப் போகும் பேச்சுவார்த்தை 'நிபந்தனை அற்ற பேச்சுவார்த்தை, என்பதன் அடிப்படையில் உருவானதாகும். விடுதலைப் புலிகள் இயக்கம் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை, மூலம் தீர்வு காணத் தயாராக இருந்தபோதும், அப்போதைய ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு விதித்திருந்த நிபந்தனைகள் பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டைகளாக அமைந்தன.

இந்தவகையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்குத் தயார் என்ற நிலையில் தற்பொழுது பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் முனைப்புப் பெற்று, அடுத்த மாதம் 13 ம். 14-ம் திகதிகளில் நேரடிப் பேச்சுவார்த்தைக்குத் திகதி குறிக்கப்பட்டுள்ளது இந்நிலையில் தான் பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்களும் எதிர்பார்க்கைகள் பற்றியும் விமர்சனங்களும் பிரஸ்தாபங்களும் இடம்பெறத் தொடங்கியுள்ளன.

ஆனால் பூர்வாங்கப் பேச்சுவார்த்தையின் முதற்கட்டச் சந்திப்பிற்கே இன்னும் இரண்டு வாரகாலம் இருக்கையில் பேச்சுவார்த்தையில் பேசப்படப் போகும் விடயங்கள், பேச்சுவார்த்தையின் முன்னேற்றங்கள் என்பன பற்றி எதிர்வு கூறுவது அரசியல் விவேகமற்ற செயல் என்றே கூறலாம், ஆயினும் இன்றைய அரசியற் சூழ்நிலையும், இது குறித்து வெளியிடப்படும் தகவல்களையும் அடிப்படையாக கொண்டு இம் முதற்கட்டப் பேச்சுக்களின் குறிக்கோள், அவற்றின் முன்னுள்ள பிரச்சினைகள் என்பனவற்றைப் பற்றி ஓரளவு ஊகிக்க முடியும்

நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பது எத்துணை தூரம் இருதரப்பையும் பேச்சுவார்த்தைக்குக் கொண்டுவந்ததோ அதேபோன்றே பேச்சுவார்தை மேசைக்கு அது பிரச்சினைகள் பலவற்றையும் கொண்டுவரும் என்றும் கூறலாம். இதில் முக்கியமானது யுத்த நிறுத்தம் அற்ற நிலையில் நடைபெறப்போகும் பேச்சுவார்த்தையாகும்.

தற்பொழுது வடக்கு - கிழக்கில் புலிகளுக்கும் - இராணுவத்தினருக்கும் இடையில் நடைபெறும் மோதல்கள் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளைப் பாதிப்படையச் செய்யாது என அரசாங்கத் தரப்பு பல தடவை கூறிவரினும் நடைமுறையில் அது பாதிப்பை ஏற்படுத்தாது எனக் கூறுவது உண்மைக்குப் புறம்பானதொன்றே ஆகும்.

இந்நிலையில் யுத்த நிறுத்தம் இன்றி சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுவதென்பது பதற்றத்தின் மத்தியில் நடைபெறும் பேச்சுவார்த்தையாகவும், அழுத்தங்களை உருவாக்கும் பேச்சுவார்த்தைகளுமாகவே இருக்க முடியும்.

இதேசமயம் இன்றைய அரசியல் சூழ்நிலைப்படி பார்த்தால் இருவாரத்தில் நடைபெறவுள்ள இவ் ஆரம்ப கட்டப் பேச்சுவார்த்தைகளில் இனப்பிரச்சினை குறித்த முக்கியமான விவகாரங்கள் எதுவும் பிரஸ்தாபிக்கப்படமாட்டாது என்பது தெளிவாகவே தெரிகின்றது ஒரு வகையில் இதுஒரு அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையே ஆகும். அதன் பிரகாரம் அடுத்த கட்ட உச்சநிலைப்பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகள் கவனிக்கப்படுவதே இப்பேச்சுவார்த்தையின் பிரதான நோக்கமுமாகும்.

அரசாங்கத்தரப்பும் இதனைதெளிவாக ஊர்ஜிதப்படுத்தியுள்ளது என்றே கொள்ளலாம். ''விடுதலைப் புலிகளுடன் நடைபெறவுள்ள ஆரம்ப பேச்சுவார்த்தையின் போது சமாதானத்திற்கான வழிவகைகளைப் பற்றி ஆராயப்படவுள்ளது'' என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் கூற்றே இப் பேச்சுவார்த்தையின் வீச்சை உணர்த்தப் போதுமானதாகும்.

சுமார் 45 வருட காலத்திற்கு மேலாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு திடீரென தீர்வொன்றைக் காண்பதென்பது சாத்தியமாகாததொன்று தான். இருப்பினும் ஜனாதிபதித் தேர்தலின் முன்னர் அதிகாரிகள் மட்டத்திலான பேச்சுவார்த்தையுடன் அரசாங்கம் நின்று கொள்வதைத் தவிர இன்றைய அரசியல் சூழ்நிலையில் அரசாங்கத்திற்கு வேறுவழியில்லை என்றே கூற வேண்டும். ஆகையினால் முதற்கட்டப் பேச்சுக்களுடன் ஜனாதிபதித்தேர்தல்வரை இப்பேச்சுவார்த்தை பிற்போடப்பட்டாலும் வியப்பில்லை.

இனப்பிரச்சினை விவகாரத்தில் தீர்வொன்றை எட்டுவதற்கு தனியாக பிரதமமந்திரி சந்திரிகா குமாரதுங்காவின் விருப்பு வெறுப்பு காரணமாகிவிட முடியாது. அவரின் ஆளுமை, திறமை என்பனவற்றிற்கும் அப்பால், தமது அதிகாரங்களின்வரையறை, அயல் நாட்டு உறவு விவகாரங்கள் என்பனவற்றையும் வெற்றிகரமாகக் கையாள வேண்டும்.

அமைச்சரவைப் பேச்சாளரும், தகவல்துறை அமைச்சருமான தர்மசிறி சேனநாயக்கா ''விடுதலைப் புலிகளுடன் அடுத்தமாதம் இருநாள் நடத்தவுள்ள பேச்சு வார்த்தையின் பின்பே யுத்தநிறுத்தம் குறித்து முடிவு எடுக்கப்படும்'' எனக் குறிப்பிட்டிருப்பினும் இன்று யுத்தநிறுத்தம் தொடர்பான முடிவொன்றை எடுக்கும் அதிகாரம் பொ. ஜ ஐ முன்னணியின் கையில் இல்லை என்பதே உண்மையாகும்.

பொ ஜ ஐ மு. அரசாங்கம் பதவி ஏற்று சுமார் ஆறுவாரங்கள் ஆகிய நிலையிலும், இராணுவத் தரப்பின் எந்தவிதமான முடிவையும் அரசாங்கத்தால் மாற்ற முடியவில்லை என்பதே யதார்த்த நிலையாக உள்ளது. இராணுவத்தினரின் உயர் மட்டத்தினரைத் திருப்திப்படுத்துவதில் அரசாங்கம் இதுவரையில் தோல்வி கண்டுள்ளது என்றே கூறலாம். இதன்காரணமாகவே பிரதிப் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ஜேனல் அனுருத்த ரத்வத்த இராணுவ அதிகாரிகளுடன் கட்டங்கட்டமாக இதுகுறித்த பேச்சுவார்த்தையை நடத்தி வரும் அதேவேளை, பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா இராணுவ அதிகாரிகளை இவ்விடயம் குறித்து விரைவில் சந்தித்துப் பேச முடிவுசெய்தமைக்கும் காரணமாகும்.

இதேசமயம், இராணுவத்தரப்புடன் ஒரு முரண்பட்ட போக்கைக் கடைப்பிடிப்பதற்கு புதிய அரசாங்கம் அச்சப்படுவதாகவும் சில விமர்சகர்கள் கருதுகின்றனர் ஜனாதிபதித் தேர்தலின் முன்போ, அன்றி ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போதோ இராணுவம் சதிப்புரட்சி ஒன்றில் இறங்கலாம் என்ற அச்சமும் இதற்குக் காரணம் என்றும் அவர்கள் கருதுகின்றார்கள்.

இவ் அச்சத்திற்கு வெளியில் இருத்து ஊகிக்கக் கூடியவகையில் சிலகாரணங்கள் தெளிவாகத்தெரிவது போன்றும்உள்ளது இதில் முக்கியமானது ரஷ்யாவிடம் இருந்து கொள்வனவுசெய்யப்பட்ட ஆயுதஇறக்குமதிக்கு புதிய அரசாங்கம் தடை விதித்த போதும் ஜனாதிபதி தனது உத்தரவின் பேரில் அனுமதி வழங்கியமையாகும்-

சுமார் 360 கோடி ரூபாவிற்குமேற்பட்ட இவ் ஆயுதக் கொள்வனவில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது என்றும், அதில் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பலர் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் புதிய அரசாங்கம் தெரிவித்திருந்த போதும் விசேட சலுகை மூலம் அவ் ஆயுதக் கொள்வனவை ஜனாதிபதி அங்கீகரித்துள்ளமையானது இராணுவ அதிகாரிகளைதிருப்திப்படுத்தும் நடவடிக்கை எனபதில் சந்தேகமில்லை. புதிய அரசின் நடவடிக்கைகளுக்கு பூரணஒத்துழைப்பு அளிப்பதாக ஏற்கனவே தெரிவித்திருந்த டி பி விஜேதுங்கா இவ்விடயத்தில் அவ்வார்த்தைகளை மீறிச் செயற்பட்டமை கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதொன்றே ஆகும்.

இந்நிலையில் ஜனாதிபதித் தேர்தலின் வெற்றி பெற்று நிறைவேற்று அதிகாரத்தைக் கைப்பற்றும் வரை பெரிய அளவில் இராணுவத்தினருக்கு அழுத்தம் கொடுக்கும் நடவடிக்கையிலோ அன்றிமுரண்பாடான போக்குகளையோ சந்திரிகா அரசாங்கம் மேற்கொள்ள முடியாது என்று துணிந்தே கூறலாம்.

அடுத்ததாக இனப்பிரச்சினை விவகாரத்தில் புதிய அரசாங்கத்தின் செயற்பாடு தனியாக உள்நாட்டு சக்திகளினால் மட்டும் தீர்மானிக்கப்படுவதாக இல்லை. இதில்வெளிநாட்டு சக்திகள் சிலவற்றின் அழுத்தங்களும் இல்லாமல் இல்லை.

இந்த வகையில் இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்திய அரசாங்கத்தின் நிலைப்பாடு முக்கியமாகின்றது. இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியா எதுவித அக்கறையும் கொண்டிருக்கவில்லை, இனப்பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் ஓர் சமாதானத்தீர்வு காண்பதையே இந்தியா விரும்புகின்றது என அது கூறிக்கொண்டாலும், சிறிலங்கா அரசாங்கம்விடுதலைப்புலிகளுடன்நேரடிப்பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதை எத்துணைதூரம் இந்தியா விரும்பும் என்பதே இதிலுள்ள முக்கிய கேள்வியாகும்,

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில வாரப் பத்திரிகைகள் சில வெளியிடும் தகவல்களைப் பார்த்தால்விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் புதிய அரசாங்கம் பேசுவதை இந்தியா விரும்பவில்லை என்றே தெரிவிக்கின்றது. இது எத்தகையநம்பிக்கைத் தன்மை பொருந்தியது என்பது உறுதிப்படுத்த முடியாத விடயமாக இருப்பினும் இந்திய செய்தி ஸ்தாபனங்கள் இனப்பிரச்சினை குறித்து வெளியிடும் தகவல்கள் புலிகளுடனான சமாதான முயற்சிக்கு ஆதரவானவையாக இல்லை என்பதை மட்டும் துணிந்து கூறலாம்.

இந்தவகையில் இந்தியாவின் நிலைப்பாடானது பேச்சுவார்த்தைக்கு எதிரானது என்பதாக இருப்பின் சந்திரிகா குமாரதுங்கா அது குறித்து கவலை கொள்ளாமல் இருக்க முடியாது ஏற்கனவே சந்திரிகாவின் எதிர்த்தரப்பான காமினி திசாநாயக்காவுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ளதோடு, தொண்டமானின் அரசியற் தீர்மானங்களிலும் கொழும்பிலுள்ள சில தமிழ்க் குழுக்களின் தீர்மானங்களிலும் கணிசமான செல்வாக்கை இந்தியா செலுத்தக் கூடிய சக்தி அதற்குண்டு.

மேலும் சிறிலங்கா இராணுவத்தலைமையுடனும் புலனாய்வுத் துறையுடனும் இந்தியா அண்மைக்காலத்தில் கொண்டுள்ள நெருக்கமான உறவும் அச்சத்திற்குரியதாகும். ஏற்கனவே சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் பலர் சந்திரிகா குமாரதுங்க ஆட்சியில் அதிருப்தியுற்ற நிலையில் இருக்கையில் சந்திரிகாவின் போக்கு தனக்கு முரண்பட்டதாக இருக்குமானால் இந்தியா அவர்களைத் தனக்கு சாதகமாகப் பயன்படுத்த மாட்டாது என்று கூறுவதற்கில்லை.

ஆகையினால், நிறைவேற்று அதிகாரங்களை கைமாற்றக் கூடிய ஜனாதிபதித் தேர்தல் நெருங்கி வரும் வேளையில் தனது அரசியல் எதிர்காலத்தைப் பாதிக்கக்கூடியது எனச் சந்தேகிக்கப்படும் விடயங்களில் கூட சந்திரிகா குமாரதுங்கா முடிவுகளை எடுக்கமாட்டார் என்று துணிந்து கூறமுடியும்.

இந்தவகையில் இருவாரங்களில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையானது, ஜனாதிபதித் தேர்தலின் முன்னர் இனப்பிரச்சினை விவகாரத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் கணிசமான தூரம் முன்னேறியுள்ளது என்பதைமக்களுக்கு வெளிக்காட்டுவதற்கானஒன்றாகவே இருக்கமுடியும் என்றே விமர்சகர்கள் கருதுகின்றனர்.

இந்தவகையில் ஜனாதிபதித்தேர்தலின் முடிவைப் பொறுத்தே இனப்பிரச்சினைத் தீர்வில் சந்திரிகாகுமாரதுங்காவின் அடுத்த கட்ட நடவடிக்கையை எதிர்பார்க்கலாம். தேர்தலில்வெற்றி கிடைக்கும்பட்சத்தில் ஜனாதிபதி பதவியுடன் கூடிய நிறைவேற்று அதிகாரமும் பாதுகாப்பு அமைச்சும் கைமாறும் போது இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தை முக்கிய கட்டங்கள் நோக்கி நகர முடியும். ஆனால், மாறும் இவ் அரசியற் சூழ்நிலையிலும், இனப்பிரச்சினைக்கு அரசியற்தீர்வு காண்பதில் சந்திரிகா தீவிர அக்கறை காட்டுபவராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இருப்பாரேயானால் இராணுவத்தரப்பில் இருந்துவரும் எதிர்ப்பையும், அண்டை நாட்டில் இருந்து வரும் அழுத்தத்தையும் அவரால் எதிர்த்து யுத்த நிறுத்தத்தையும் பேச்சுவார்த்தையையும் தொடர முடியும்.

ஜெயராஜ்

# நிறைவான கல்விக்கு

களை ஆராய வேண்டுமே தவிர பின்னடைவிற்கான காரணங்களை தேடிக் கொண்டிருத்தலாகாது சர்வதேச நாடுகளின் வளர்ச்சி வீதத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும் நாம் ஏன் அவர்களிலும் பார்க்க கூடுதலான உயர்ந்த பெறுபேற்றைப்பெற முயற்சிக்கக் கூடாது எனச் சிந்திக்க வேண்டும் சிந்திக்கும் ஆற்றல் வளர்க்கப்படாததே இவ்வாறான கேள்விக்கு ஆதாரமாகிறது

கேள்வி; மேற்கண்ட குறைபாடுகளைச் சீராக்குவதற்காக இனங்கண்ட முக்கிய அம்சங்களைக் கூறுவீர்களா?

பதில்: ஆம்; தற்போதைய கற்பித்தல் நுட்பம் செயல்முறை சார்ந்ததாக்கப்படல் வேண்டும் அத்துடன் எல்லோரும் சித்தி பெறுவதற்கு ஏற்றதாகப் பிரயோகிக்கப்படவேண்டும் வெறும் எழுத்துத் தேர்வுக்காக மாணவரைத் தயாராக்கும் இலக்கிலிருந்து மாறி வாழ்க்கைக்கு மாணவரைத் தயாராக்கும் நோக்கைக் கொள்ள வேண்டும்

அநேக பாடங்களுக்குத் தற்போது பின்பற்றும் மதிப்பீட்டு நுட்பங்களில் அறிமுறை சார்ந்த எழுத்துத் தேர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் கற்பிக்கும் முறையும் எழுத்துத் தேர்வுக்கேற்றதாகவே அமைகின்றது- இதனால் எழுச்சி ஆட்சி, உளவியக்க ஆட்சிகள் கற்பித்தலில் புறக்கணிக்கப்படும் நிலையுள்ளது இந்நிலை மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை விருத்தி செய்யப் பூரணமாக உதவுவதாக இல்லை- எனவே எழுச்சியாட்சி, உளவியக்கம் சார் மதிப்பீடுகளும் தேர்வுகளில் சேர்க்கப்படுவதனால் கற்பித்தல் நுட்பத்திலும் மாற்றங்கள் கொண்டுவர பாடசாலைகளுக்கு உந்துதலைக் கொடுக்கும்-

கேள்வி; முன் கூறியவாறு கற்பித்தல் நுட்பம், மதிப்பீட்டு நுட்பங்களைச் சீராக்குவது தொடர்பாக கல்வித்திணைக்களம் என்ன நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது?

பதில்: மேற்படி பிரச்சினைகள் தொடர்பாக ஆசிரியர், அதிபர், மாணவர்கள், பெற்றோர், சமூகம் ஆகியோருடன் கலந்துரையாடல்களைமேற்கொண்டு பிரச்சினைகளுக்கான காரணகாரியங்களை இனங்கண்டு அறிக்கைப்படுத்தியுள்ளோம்.

இனங்காணப்பட்ட பிரச்சினைகளை விடுவிப்பதற்கான திட்டங்களைத்தீட்டி பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்திப் பார்த்து மீள் அமைப்பு செய்து வருகின்றோம்.

பரீட்சார்த்த முறையில் வெற்றிகரமானதென இனங்கண்ட திட்டங்களைப் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த ஏற்பாடுகள் செய்து வருகிறோம்

கேள்வி: பரீட்சார்த்தத் திட்டங்களில் சிலவற்றைக் கூறுவீர்களா?

பதில்· ஆம், வகுப்பில்கற்கும் எல்லா மாணவரும் சித்தி பெறுவதற்கான கற்பித்தல் நுட்பம் எல்லாப் பாடங்களுக்கும் வெற்றிகரமாகப் பரீட்சிக்கப்பட்டது. முறையாக முன்னாயத்தம் செய்யப்பட்டு செயல் முறையான கற்பித்தலும் உடனுக்குடனான செயல்முறை மதிப்பீட்டு நுட்பமும் இத்திட்டத்தில் பிரயோகிக்கப்பட்டது- இதன் வெற்றியினடிப்படையில் கடந்த சனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களில் முதன்மையாசிரியருக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது; பின்னர் அவர்களில் 1000 ஆசிரியர்களுக்கு 5நாள் பயிற்சி வழங்கப்பட்டது- தொடர்ந்து ஏனையோருக்கும் பயிற்சியளிக்கப்படுகிறது-

கேள்வி: பாடசாலைகளில் இம்முறை தற்சமயம் பிரயோகிக்கப்படுகிறதா?

பதில்; ஆம் பல ஆசிரியரால் பின்பற்றப்படுகிறது

கேள்வி; வேறு என்ன திட்டங்களைப் பரீட்சித்துப் பார்த்து நடைமுறைப்படுத்த முயற்சிசெய்கிறீர்கள்?

பதில்; எல்லாப்பாடங்களுக்கும் செயல் முறைக்கல்வியளிக்கப்படும் போது பல் வேறு செயல்முறைத் திறன்களும்மனப்பாங்கும்கூட மதிப்பீடு செய்யப்பட்டு பொருத்தமான பின்னூட்டல் மூலம் பின்னிற்கும் மாணவரை அடைவிலக்கையடையச் செய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படுகிறது

தற்சமயம் ஆரம்பக் கல்வி வாழ்க்கைத் திறன், கனிட்ட தொழில்நுட்பம், தொழில் நுட்பம்அழகியல்கல்விவிஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு மட்டும் செயல் முறை மதிப்பீடு பிரயோகிக்கப்பட்டு வருகின்றது ஆனால் தற்சமயம் கணிதம், மொழி, சமயம், உடல் நலக்கல்வி, ஆங்கிலம் சுற்றாடல்கல்வி போன்ற எல்லாப் பாடங்களுக்குமே செயல் முறைக்கல்வி மிக உயர்ந்த பெறுபேற்றைத் தருமெனவும் இவை காட்டியுள்ளதோடு அப்பாடங்களுக்கான செயல் முறை மதிப்பீட்டு நுட்பத்தையும் மாணவர் அடைய வேண்டிய குறிக்கோள்களின் அடிப்படையில் தீர்மானிக்க ஆசிரியருக்குப் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது

கேள்வி; எந்தப்பாடசாலை ஆசிரியருக்கு இவ்வாறான பயிற்சியளித்துள்ளீர்கள்?

பதில், பொதுவாக வாழ்க்கைத்திறன் கல்வி ஆசிரியருக்கும் விசேடமாக ஏனைய ஆசிரியர்கள் என்ற வகையில் யா. சென் ஜோன் பொஸ்கோவித்தியாலய ஆசிரியருக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது

கேள்வி: இத்திட்டங்களை எவ்வாறு ஏனைய பாடங்களுக்கு விஸ்தரிக்க எண்ணியுள்ளீர்கள்?

பதில்: மேற்குறித்த இரு நுட்பங்கள் தொடர்பாக ஒரு விவரணச்சித்திரம் ''நிறைவான கல்விக்கு'' எனும் தலைப்பில் வீடியோ நாடாவில் பதிவு செய்து வருகிறோம். அதனில் நான், முற்கூறிய எல்லா அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது- விசேடமாக எல்லோரும் சித்தி பெறுவதற்கான கற்பித்தல் நுட்பமும், செயல்முறை மதிப்பீட்டு நுட்பமும் உள்ளடங்கும்-

இந்த படத் தயாரிப்பின் போது பெற்றோர், ஆசிரியர் கல்விமான்கள் ஆகியோரும் பார்வையிட அனுமதிக்கப்பட்டு அவர்களின் கருத்துக்களும்கவனத்திலெடுக்கப்பட்டுள்ளதோடு ஒளிப்பதிவும் செய்யப்பட்டுள்ளது-

இந்த நுட்பங்களைக் கொண்ட இந்நாடாஆசிரியர், அதிபர், பெற்றார்,மாணவர்களின் பார்வைக்கு விடப்படும்- இதன் மூலம் இந்தக் கற்பித்தல் நுட்பம், மதிப்பீட்டு நுட்பம் பற்றிய நம்பிக்கையும் விளக்கமும் ஏற்படும் தவறான எண்ணக் கருத்துக்களும் அகலும் என நம்புகிறோம் அதேவேளை இந்த நுட்பங்கள் பற்றி விரிவான நேரடியான அனுபவத்தை அறியவும் வாய்ப்புண்டாகும்- இதன் பெறுபேறாக இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த யாவரும் முனைவார்கள் என நம்புகிறோம்.

கேள்வி; இனங்காணப்பட்டு நடைமுறைப் படுத்தவுள்ள வேறுதிட்டங்கள் பற்றி நாம் அறியலாமா?

பதில்; ஆம், கல்வி நிருவாகம் மேற்பார்வை, கண்காணிப்பு தொடர்பாக இனங் கண்ட பிரச்சினைகளை விடுவிப்பதற்காக ஆசிரியர், அதிபர், முதன்மையாசிரியர், சேவையையும், கோட்டப்பணிமனை, வலயப் பணிமனையினையும் முறையான மதிப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கேற்ற மதிப்பீட்டுத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு உரியவர்களின் கருத்தறியும் நடவடிக்கைகளும், பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்தும் செயற்பாடும் தற்சமயம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

கேள்வி: எமது பிரதேசக் கல்வி முன்னேற்றத்துக்குத்தடையாகவுள்ள காரணிகளைப் பற்றிக் கூறுவீர்களா?

பதில்: இதற்கு நீண்ட பதில் சொல்லவேண்டியிருக்கும், எனினும் சுருக்கமாகக் கூறின் அரசியல் காரணிகள் ஒருபுறம் எமக்கு இடைஞ்சலாகவுள்ளன என்பது உண்மைதான். ஆனாலும் அப்பிரச்சினையெல்லாம் அறிவினாலும் முயற்சியினாலுமே வெல்லமுடியும், பிரச்சினைகளைக் கூறிக்கொண்டிருப்பதாலோ அவற்றைக் கண்டு விரைந்து ஓடுவதாலோ ஆக்கபூர்வமாக எதுவும் நடக்கப் போவதில்லை, பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கு அறிவைப் பயன்படுத்த வேண்டுமே தவிர செய்யாதிருப்பதற்கான காரணங்களைக் கூறுவதற்கு அறிவைப் பயன்படுத்திக் கொண்டிருப்பதை அறிவென்று கூறமுடியாது. அதைஅறியாமை, இயலாமை, சோம்பேறித்தனம் என்றே கூறவேண்டும்,

முயற்சிக்காத எவரும் வெற்றிகாண முடியாது என்பது வரலாறு எமக்குக் கற்றுத்தரும் பாடமாகும் வெற்றிக்கு வழி இன்னும் முயற்சிப்பதேயாகும். எனவே முயல்வோம் வெல்வோம்.

கேள்வி; கல்வித்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் இவ்வேலைகளுக்கு வேறு யாரின் உதவிகளெல்லாம் உங்களுக்குக் கிடைக்கிறது?

பதில்: கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப்பணிப்பாளர் விசேட பாடங்களுக்கான உ. க. பணிப்பாளர்கள், முதன்மைபரிசில் அதிபர் ஆசிரியர் பெற்றோர், மாணவர் யாவரினதும் ஒத்துழைப்பும் கிடைத்து வருகிறது, இவற்றைவிட கல்விக் கழகம், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், கல்வி மேம்பாட்டுப் பேரவை போன்றவற்றின் ஆதரவு எமக்குக் கிடைத்துவருகிறது.

கேள்வி:- இவ்விவரணச் சித்திரம் எவ்வாறு முன் கூறிய காரணிகளை நிவர்த்தி செய்து கல்விப் பெறுபேற்றை உயர்த்தும் எனக் கருதுகிறீர்கள்?

பதில்: இவ்விவரணச் சித்திரத்தில் கல்விப் பிரச்சினைகளும் கல்வியின் தற்போதைய நிலையும் அவற்றை நிவர்த்தி செய்ய தற்போது எடுக்கப்படும் நவீன கற்பித்தல் நுட்பம் மதிப்பீட்டு நுட்பம், நிர்வாக நுட்பம் ஆகியனவற்றின் செயற்பாடுகளைக் கொண்டதாக அமைவதால் இதனைப்பார்க்கும் எவரும் இவ்விடயங்களை தெளிவாகப் புரிந்துகொள்வதோடு தமது செயற்பாடுகளைச் சிறப்புறச் செய்வதற்கு உரிய அறிவை, விளக்கத்தை, திறனை, மனப்பாங்கைபெறுவதற்குவாய்ப்புண்டு என நம்பிக்கை வெளியிட்டார்-

## சிறப்பு

ராயுதம்-02'' ஆகிய இரு விவரணச்சித்திரங்கள் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் இன்று மாலை 5.00 மணிக்கு காண்பிக்கப்படவுள்ளன.

உங்கள்
பிள்ளைகளுக்கான
அதி உன்னத
முதலீடு
இது ஒன்றைத் தவிர
வேறெதுவாகவும்
இருக்க முடியாது

இன்று
இதைச்
செய்வதை எண்ணி
வருடம் பூராவும்
பெருமைப்படுவீர்கள்!

நூறு
அல்லது
இருநூறு ரூபா
செலுத்தி
சந்தாதாரர்
ஆகுங்கள்

தாமதித்தால்
தவிக்க
நேரிடும்

15-10-94 இன்
முன்னர்
இதனைச் செய்யுங்கள்
அப்போது தான்

# யுத்தத்திற்கு எதிரான அமைப்பு; நேற்று முதலாவது பிரசாரக் கூட்டம்

(கொழும்பு)

யுத்தத்திற்கு எதிரான பிரசாரத்தை மேற்கொள்வதற்கென பல அமைப்புகள் இணைந்து போருக்கு எதிரான இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளன.

இந்த இயக்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட முதலாவது கூட்டம் நேற்று பிற்பகல் நுகேகொட சந்தியில் பேராசிரியர் காலோ பொன்சேகா தலைமையில் நடைபெற்றது.

ஒசன் ராஜகருணநாயக்க, வாசுதேவநாணயக்கார, தர்மசிறி பண்டார நாயக்க, எஸ். மனோரஞ்சன், விவியன் குணவர்த்தன, வி. ஏ. காதர் ஆகியோர் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

இறுதியில் யுத்த விரோத இசை நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.

# யாழ்தேவி முறியடிப்பு நினைவுக்கல் திறப்பு

(தென்மராட்சி)

சிறிலங்கா இராணுவத்தின் ஒப்ரேஷன் யாழ்தேவி நடவடிக்கை முறியடிப்பின் முதலாம் ஆண்டு நினைவு கூரலும் நினைவுக்கல் நாட்டலும் நேற்று இடம்பெற்றது. காலை 10 மணியளவில் இதில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான நினைவுக்கல் சமர் நடந்த அல்லிப்பளை புலோப்பளை பகுதியில் சம்பிரதாயப்படி திரைநீக்கம் செய்யப்பட்டது

பளை வட்டப் பொறுப்பாளர் திரு சின்னக்கிளி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் முதலில் பொது ஈகச் சுடரினை விடுதலைப் புலிகளின் மருத்துவ பிரிவைச் சேர்ந்த திரு. மனோச் அவர்களும், தேசியக் கொடியினை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி அவர்களும் ஏற்றி வைத்தனர்.

நினைவாலய தூபி ஈகச் சுடரினை யாழ் மாவட்ட விசேட தளபதி திரு செல்வராசா அவர்கள் ஏற்றி வைத்து நினைவுக்கல்லை திரைநீக்கம் செய்து வைத்தார், இந்நிகழ்வில் பொது மக்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவாளர்கள், உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். பின்னர் திரு. இளம்பரிதியும் மாவீரர் செயல்பாட்டு குழுவைச் சேர்ந்த திரு. பூபாலசிங்கம் அவர்களும் உரை நிகழ்த்தினர். (86)

## ஆளும்கட்சி

பதி தேர்தலை தவிர்த்துவிடும் எண்ணம் இருபிரதான கட்சிகளுக்கும் இருந்ததும் கவனத்திற்கு உரியதே. ஆனாலும் இருகட்சிகளும் ஒன்றை ஒன்று நம்பாத நிலையில் அரசியலமைப்பை திருத்துவது பற்றிய மசோதாவை கொண்டு வரமுடியாத நிலை ஏற்பட்டு விட்டது

இதேவேளை ஐக்கியதேசிய கட்சிக்கு எதிரான வாக்குகளை சிதைக்கும் நோக்கத்துடன் தமிழ் வேட்பாளர்ஒருவரையும் மேலும் இடதுசாரி தொடர்புடையவர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தி மறைமுகமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது; மக்கள் கட்சி ஒஸிஅபயகுணசேகரா ஆரிய புளோகொடவின் ஜனநாயக முற்போக்கு முன்னணி மற்றும் ஜே வி. பிபோன்றகட்சிகளையும்தேர்தலில்குதிக்கவிடுவதன் மூலம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு கிடைக்கக்கூடிய இடதுசாரி வாக்குக்களை மிக தந்திரமான முறையில் சிதை

## ராணுவ

நிறுத்தம் செய்து கொள்ளப்படும் வரை தமது நடவடிக்கைகளைத் தொடர்வர்.

விடுதலைப் புலிகளின் பல அணிகள் கிழக்கு மாகாணம் வந்துள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதனை ஊர்ஜிதப்படுத்துமாப்போல கிழக்கில் பல தாக்குதல்களை புலிகள் நடத்தி வருகின்றனர். கிழக்கில் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட்ட பின் புலிகள் நடத்திய பெரியதாக்குதல் நேற்று முன்தினம் நடத்தப்பட்டது ஆகும் எனகுறிப்பிட்டுள்ளார்.

## இன்னும்

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக மகளிர் அமைப்புப் பொறுப்பாளர் செல்வி மகேஸ் அவர்கள் வரவேற்புரையையும், விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழக, திரைப்படப் பிரிவுப் பொறுப்பாளர் திரு. நா. பகலவன் (பாஸ்கரன்) வெளியீட்டுரையையும் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு.

## பவள விழா

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய சங்கத்தின் பவள விழா இன்று பிற்பகல் 4. 30 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திரு. கோ. சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும். பவள விழா மலர் வெளியீடு நாளை நடைபெறும்

## மட்டக்களப்பு

★ நடுத்தர ரவைகள் - 1070
★ எம். 75 ரசகுண்டு - 12
★ தொப்பி - 06

என்பன விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத்தாக்குதல் கூழாவடி இராணுவ முகாமிலிருந்து 5-ம்கட்டை இராணுவமுகாம் நோக்கி சென்று கொண்டிருந்த 20க்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீது கூழாவடி முகாமிலிருந்து 800 யார் தூரத்தில் வைத்து நடத்தப்பட்டது காலை 6. 40 மணியளவில் ஆரம்பித்த திடீர் அதிரடித்தாக்குதல் ஏழு நிமிடங்கள் மட்டுமே நீடித்தது.

இதேவேளை கூழாவடி இராணுவ முகாம் மீதும் விடுதலைப்புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்தினர் இதன் போது ஏற்பட்ட சேத விபரம் தெரியவரவில்லை.

இத்தாக்குதல் நடைபெற்ற நேரம் உலங்குவானூர்தியொன்று தொடர்ச்சியான கலிபர் தாக்குதலை மேற்கொண்டது இதன் போது புலிகள் தரப்பில் சேதம் எதுவும்இல்லை.

## உலக வங்கி

செய்வதற்கு நடவடிக்கை எடுப்பார்கள்.

அகதிமுகாம் புனரமைப்பு, மக்களுக்கு அதிமுக்கியத்துவம் வாய்ந்த வீதிகள், கட்டடங்கள் புனரமைப்பு, பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கை ஆகியவற்றை உடனடியாக மேற்கொள்வதற்கு இக்குழுவினர் ஆராய்வார்கள்.

இக்குழுவினருக்கு வேண்டிய தரவுகளை வழங்குவதற்குரிய நடவடிக்கையில் செய

## கற்பிட்டி

யாழ் வீதியில் இருந்தும் ஊர்வலமாக நெல்லியடிச் சந்தியை வந்தடைந்து பின்னர் கடற்புலிகளின் பான்ட் வாத்திய இசை முன்னே செல்ல கடற்கரும்புலியின் உருவப்பட ஊர்தி பின்சென்றது. இவ் ஊர்தியில் கடற்கரும்புலிகள் லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் லக்ஸ்மன், கப்டன் வாமன் ஆகியோரின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன. ஊர்தி மாவீரர் கலையரங்கை நோக்கி நகர்ந்தது இதனைத் தொடர்ந்து மக்களும் விடுதலைப் புலிகளும் அணி வகுத்துச் சென்றனர்.

கடற்புலிகளின் கப்பலுக்கு சீருடை அணிந்த மாணவிகள் மலர் தூவி வந்தனர். மாணவர்கள் தீப்பந்தம் ஏந்தி வந்தனர். தொடர்ந்து 'சாகரவர்த்தனா' கப்பல்போன்ற மாதிரி கப்பலும் நகர்ந்து வந்தது. கடற்புலிகளின் பாண்ட் வாத்திய இசையுடன் மாணவர் அமைப்பு, மற்றும் விடுதலைப் புலிகளின் அமைப்பைச் சேர்ந்த பிரிவினரின் பாண்ட்வாத்தியமும் வந்து சேர்ந்தது. காவடி ஆட்டமும் இதனுடன் இணைந்து வந்தது.

கடற்புலிகள், கரும்புலிகள், மாணவர் அமைப்பு அணி வகுப்புகள் மைதானத்திற்கு வந்ததும் மைதானமே நிரம்பிய நிலையில் மக்கள் கூட்டம் திரண்டிருந்தனர்.

பின்னர் 6.15 மணிக்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன். தியாகம் ஈகச்சுடரை ஏற்றி வைத்தார். மாவீரர்களின் உருவப் படங்களுக்கு பெற்றோர் மலர்மாலை அணிவித்தனர். தொடர்ந்து யாழ். மாவட்ட கடற்புலிகள்-மாணவர் அமைப்பு பொறுப்பாளர் திரு வைகரன் தலைமையில் அஞ்லிக்கூட்டம் ஆரம்பமானது. கடற்புலிகள் மாணவிகளின் படையணியைச் சேர்ந்த செல்வி பூரணி, மளிகர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி ரதி, கடற்புலிகளின் அரசியற் பயிற்சிப் பள்ளி பொறுப்பாளர் கவிஞர் மு. வே யோ. வாஞ்சிநாதன், மகளிர் படையணியைச் சேர்ந்த திருமதி தமிழ்க்கவி, யாழ் மாவட்ட அரசியற் துறை பொறுப்பாளர் திரு. இளம்பரிதி. கடற்புலிகளின் சிறப்புத்தளபதி திரு. சூசை ஆகியோர் உரையாற்றினர். கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (யோ)

## புலிகளின் குரல்

## வகுப்புகள்

நாளை சனிக்கி... காலை 9. 00 மணிக்... சாதனை பாடசாலை... பத்தில் நடைபெறும்... தாட்ட மத்தியஸ்த... கான வகுப்பில் ... கொள்ள விரும்பு... அனைவரையும் ... கொள்ளுமாறு ... மாவட்ட கரபந்தா... கம் கேட்டுக்கொள்கி...

## பொதுக்கூ...

யா / புங்குடுதீவு க... பிகை வித்தியாலய, யா... குடுதீவு சித்திவிநாயகர்... வித்தியாலய பாடசா... விருத்திச் சபைப் ... கூட்டம் இன்று வெ... பகல் 3 மணிக்கு ... பந்தி உயர்கலைக் க... நடைபெறவுள்ளது. ... றோர்கள், நலன்வி... கலந்துகொள்ளுமாறு ... கள கோரியுள்ளனர்.

## அகதிகளை

யில்லாத அச்சம்கொ... இந்திய அதிகாரி ஒரு... டிக் காட்டியதாக தெ... கின்றது.

இதேவேளை இ... அகதிகளை இந்தியா... திரும்பி வருவதை ... நோய் பரவலாம்என... காட்டி நிறுத்தி... ஐக்கிய நாடுகளின்... கான நிறுவனம் ... நடவடிக்கை என... ளது.

இந்த அகதிகள் ... லிருந்து வெகு ... அமைந்துள்ள ... லிருந்து திரும்பு... வாறு இவர்களது ... நிறுத்துவது தே... என அவ் அமை... தெரிவித்துள்ளது.

## கட்சிகளின்

நாயக்கா, இலங்கை ... லாளர் காங்கிரஸ் தலைவா... தொண்டமான் ஆகியோர் ... கூட்டத்தில் கலந்துகொள்ள... வில்லை என்பது குறிப்பிட... தக்கது.

இக்கூட்டத்தில் சட்டவா... கங்கள் எதுவும் மேற்கொள்... ளப்படவில்லை.

## சமாதான

எந்தத் தடை... சமாதானம் ஏற்ப... பேச்சுக்கள் ... அண்மைக்கால தாக்கு... சமாதான முயற்சிகளை... விகுறியாக்கிவிடும் என... அரசியல்வாதிகள் மேற்... ண்டு வரும் பிரசார... பொய்யானவை என மே... அமைச்சர் கூறினார்.

## நாம்

இதற்கான முழுப்பலனையும் அனுபவிக்க முடியும்

செப்டெம்பர் இதழுடன் இணைக்கப்பட்ட படிவத்தை பூர்த்தி செய்து அனுப்புங்கள் அல்லது நேரில் தொடர்பு கொள்ளுங்கள்

நிர்வாக ஆசிரியர்

**நங்கூரம்**

சமூக அறிவியல் ஏடு

அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(சி-10431)


க்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக லண்டனிலுள்ள சோமவன்ச அமரசிங்கவும் கூட அழைக்கத் தயாராக ஐ.தேகஉள்ளது.

எனவே இந்த நிலையில், சிறுபான்மை வாக்குகளே ஜனாதிபதி தேர்தலில் வெற்றியை தீர்மானிப்பவையாக அமையக் கூடும் அதாவது முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி உட்பட ஏனைய தமிழ் கட்சிகளின் வாக்குகள் தேர்தல் முடிவுகளின் முதல் சுற்றிலேயே வெற்றியை தீர்மானிப்பதில் கணிசமான பங்கு வகிக்கக்கூடும்இதற்கு பொது ஜன ஐக்கிய முன்னணியின் வாசல் படியில் காத்திருக்கும் தொண்டமானும் உதவக் கூடும்

ஜனாதிபதி தேர்தலில் ஐ,தே,கவிற்கு கிடைக்கும் வாக்குகள் கணிசமாகக் குறையுமாயின் அது காமினியின் அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கும் என்றும் இதனால் காமினியின் எதிர்ப்பாளர்கள் ஐ.தே'கவில் மீண்டும் பலம் பெறக்கூடுமென அரசியல் அவதானிகள் சிலர் ஆருடம் கூறுகின்றனர். இதே போன்றதொரு நிலைபொது ஜன ஐக்கிய முன்னணியிலும் காணப்படுகின்றது- பொதுத் தேர்தலை விட வாக்குவீதம் இம்முறை குறைவடைந்தால் அதன் மூலம் சந்திரிகாவின் தலைமைத்துவத்தில் நம்பிக்கையீனம் முளைவிடக்கூடும் இதனால் எதிர்காலத்தில் பொது ஜன ஐக்கிய முன்னணியிலும் பிளவுகள் தோன்றுவதுமட்டுமல்ல சிறுபான்மை அரசாங்கமான சந்திரிகா அரசாங்கமும் நெருக்கடிகளைச் சந்திக்கக்கூடும்.

பூவண்ணன் அவர்கள் சிறப்புரையையும் நிகழ்த்துவர்.

மதிப்பீட்டுரையை திரு செம்பியன் செல்வன், திரு. குப்பிளான் ஐ சண்முகன், திரு கேசவராஜா ஆகியோரும், பதிலுரையை திரு. யேசுதாசன் (இணை இயக்குநர்) அவர்களும், நன்றியுரையை யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. குமணன் அவர்களும் நிகழ்த்துவார்கள்.

இவ் வைபவத்தில் ''இன்னும் ஒருநாடு'' ஒளிநாடாவை முல்லை மாவட்ட விசேட தளபதி திரு. சாளம்பன் வெளியிட்டு வைக்க நிதர்சனம் பொறுப்பாளர் திரு. தமிழன்பன் அவர்கள் பெற்றுக் கொள்வார். கலைஞர்களுக்கான கௌரவத்தை தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச் செல்வன் அவர்கள் வழங்குவார்.

இப் படத்தின் கதைவசனம், நெறியாள்கையினை இது எங்கள் தேசம், தமிழோசை, சின்னவிழிகள் தாயகக்கனவு முதலான வெற்றிப் படைப்புகளைத் தந்த திரு. பொ. தாசன் அவர்கள் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒரு விமானத்தின்

யப்படும் பின்னர் இந்தவிபரங்களை விமான நிலைய கட்டுப்பாட்டு அறையிலிருந்துவிமானத்திற்குகொடுக்கப்பட்ட ஆணைகள் மற்றும் விமானத்திலிருந்துகட்டுப்பாட்டு அறைக்கு கிடைத்த செய்திகள் போன்றவற்றுடன் ஒப்பிடுவார்கள் இதன் மூலம்விபத்து நடந்த காரணம்கண்டறியப்படும்.

லக அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

இக்குழுவினர் சமீபத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை ஆராய்ந்து சென்றுள்ளனர்.

இவர்கள் மிக விரைவில் யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளனர். (தி, பா)

## பிளேக்

தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சின் செயலாளர் லயனல் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பிளேக்நோயாளிகள் யாரையும் கொண்ட கப்பல், கொழும்பு துறைமுகத்திற்குள் எக்காரணம் கொண்டும் அனுமதிக்கப்படமாட்டாதெனவும், இந்தியாவிலிருந்து வரும் கப்பல்கள் யாவும் கடுமையான பரிசோதனைக்குள்ளாக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பம்பாயிலிருந்து கொழும்புக்கு வந்த ரஷ்யக் கப்பலொன்றின் 20 பணியாளர்கள் பிளேக் நோயினால் பாதிக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதை தொடர்ந்து, இவர்கள் துறைமுகத்துள் பிரவேசிக்காதவாறு தடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது

## புனர்வாழ்வு

அகதிகள் புனர்வாழ்வு அதிகாரியும், திருமலை மாவட்ட அகதி முகாம்களுக்கும் செயலகத்திற்கும் இணைப்பதிகாரியாகவும் கடமை புரியும் தமிழ் அதிகாரியை மூன்று மணித்தியாலங்கள் தடுத்து வைத்தனர்,

இறுதியில் காணாமல் போய்விட்ட பொருள்களை கண்டுபிடித்துத் தருகிறோம் என்று அந்த அதிகாரி வாக்களித்ததன் பின்னர் விடுவிக்கப்பட்டார். (தி, பா)

## நிகழ்ச்சி நிரல்

### 1994 09-30
### வெள்ளி இரவு

08 01 -கலைமஞ்சரி-நிகழ்ச்சியில் முதலில் நூல் அறிமுகம், வெளிச்சம் சஞ்சிகையின் சிறுகதைச் சிறப்பிதழ் அதனை அடுத்து சிறுகதை- இளங்கதிர் எழுதிய ''நாட்டுப் பயனற்று அன்னியருக்கு இரையாகி'' சிறுகதையைத் தொடர்ந்து கவிதை- நல்லை அமிழ்தன் எழுதிய ''யாழ்ப்பாண நூலகம்''

08.25 -கணப் பொழுது- போராளி நரேந்தி எழுதிய ''கப்டன் சத்தியன்''

08 30 - செய்திகள்

08-40 - அரசியல் அரங்கம் - வே. பாலகுமாரன் எழுதிய ''குந்தியிருக்கத் தன்னும் இடமில்லாது போய் விடுமா''

08.50 - வாத்தியகானங்கள்.

### 1994 -10-01
### சனி காலை

07.02 -மாவீரவணக்கம்

07.15 - நீங்கள் கேட்டவை

07 30 - செய்திகள்

07 35 - பத்திரிகைச் செய்திகள்

07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

ர்க்கப்பட்ட கற்பிட்டி கட… குதி இராணுவ கடற்ப… முகாம்களை சூழக் கொ… டது- இப்படியான பாதுகாப்பு பகுதியினூடாக மன்னார் -கொழும்பு கடற்ப…யில் ரோந்து சென்ற இவ்… கப்பலை வெடிமருந்து… றிய படகில் சென்ற… கரும்புலிகள் அழித்த…

ஐந்து நிமிடத்திற்குள் இ… தகர்ப்பை கடற்கரும்புலிகள் செய்து முடித்தனர். கடல் கொந்தளிப்பு அதிகமா… இருந்ததனால் ஆயுதங்கள… முழுமையாக எடுக்க மு… வில்லை. எனினும், கப்… தளபதி வளைத்துப்… பட்டார். இரண்டு… களுக்கு முன் பயிற்… ப்பித்த எங்களது சிறா… பத்து மைல் நீந்த முடி… கடலில், 21 வருடங்க… சேவையாற்றிய கப்ப… தியால் நீந்த முடிய… 87-ம் ஆண்டில் இந்… மராட்சியில் தாக்குதல் நடத்… தியமைக்காக விருது பெற்ற… வர்- விருதுடன் இன்று எம… மவரால் பிடிக்கப்பட்டு விட்டார்,

சகோதரி நளாயினி… ரித் தாக்குதலில் ப… டைந்தும், விடாமு… யோடு பயிற்சி எடுத்து… வீரசாதனையை படைத்… ளார். இவருடன் மங்… வாமன், லக்ஸ்மன் ஆ… கடற்கரும்புலிகளும் இந்த வர… லாற்று சாதனையில் தம்மை இணைத்துக் கொண்டு… னர்.

எமது கடலில் நாங்கள் உலாவரும் போதுதான் த… ழீழத்தின் வழி பிறக்கு… இன்று கடற்படையின் உ… யுடனேயே, இராணுவ மு… ம்களை படையினரால் த… வைத்துக் கொள்ளமுடி… றது, எனவே கடற்பகுதி… எமது ஆதிக்கம் முழுமை… கும் போதுதான் நாம் வி… பெறமுடியும் என அவர் அ… மேலும் தெரிவித்தார்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி; 31-ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்' பணிமனையில் 1994-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 30 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது